# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 03 வெள்ளிக்கிழமை (17-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:52


### நாட்டில் நிலையான சமாதானம் மலர்வதற்கு

## புலிகளின் வானொலிச் சேவை அவசியம் தேவை என்கிறது அரசு

கொழும்பு,ஜன.17

"தற்போதைய சமாதான முயற்சிகளை பொறுத்தவரை 'புலிகளின் குரல்' வானொலிச் சேவை அவசியமான தொன்று. இச்சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதை சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட ஆக்கபூர்வமான முன்னேற்றமாகவே அரசு கருதுகின்றது."

- இவ்வா அரசுத் தரப்பில் இச்சேவையை வரவேற்று கருத்து வெளியிட்டிருக்கின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

"அரசும் புலிகளும் பேச்சுக்களில் கலந்துகொள்ளும்போது இரு தரப்பினரும் தத்தமது கருத்துக்களை மக்கள் முன்வைக்க வாய்ப்பளிக்க வேண்டும். அப்போதுதான் அவற்றை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பதை மக்கள் தீர்மானிக்க முடியும்" என்றார் அமைச்சர் பீரிஸ்.

அமைச்சரவைக் கூட்டமுடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல்

(13ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கிக்கு பிரபா வாழ்த்து!



கிளிநொச்சி,ஜன.17

தமிழர் தாயகத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு உதவ முன்வந்துள்ள உலக வங்கிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உலக வங்கியின் துணைத் தலைவர் மீக்கோ நிசிமிசுவுடன் நேற்று கிளிநொச்சியில் நடத்திய கலந்துரையாடலின்போது தேசியத் தலைவரின் வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு உலக வங்கியின் துணைத் தலைவர் மீக்கோ நிசிமிசு, உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் (14ஆம் பக்கம் பார்க்க)

# அரசு – புலிகள் முன்வைத்த திட்டவரைவுகள் குறித்து அடுத்த கூட்டத்தில் இறுதித் தீர்மானம்

## கிளிநொச்சியில் 'சிரான்' கூட்டம் நேற்று முடிவு

கிளிநொச்சி,ஜனவரி17

**கிளிநொச்சியில் நேற்று முடிவுற்ற உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் (சிரான்) கூட்டத்தில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக அரசும் புலிகளும் முன்வைத்த திட்ட வரைவுகள் குறித்து 'சிரானி'ன் அடுத்த கூட்டத்தில் இறுதி முடிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரசு 7 திட்ட வரைவுகளையும் புலிகள் 12 திட்ட வரைவுகளையும் முன்வைத்திருக்கின்றனர்.**

புலிகள் சமர்ப்பித்த திட்டங்களின் மதிப்பீடு 350 கோடி ரூபாவாகும்.

இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்ட திட்ட வரைவுகள் வருமாறு:-

★ முல்லைத்தீவு - மாங்குளம் -வெள்ளாங்குளம் இடையேயான வீதி மீள் புனரமைப்பு

★ அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில், சாய்ந்தமருது மற்றும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஐஸ்கட்டித் தொழிற்சாலை அமைத்தல்

★ மன்னாரிலுள்ள நெற்களஞ்சிய வசதியை சீரமைத்தல்

★ கிளிநொச்சி மாவட்டத்தில் பால் பதனிடும் வசதியை ஏற்படுத்தல்.

★ முல்லைத்தீவு, அம்பாறை, மனனார் மாவட்டங்களில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல்

★ கிளிநொச்சியிலுள்ள - மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான - அடைக்கலம் கொடுக்கும் நிலையம் புனரமைப்பு.

(2ஆம் பக்கம் பார்க்க)



உலக வங்கியின் உப தலைவர் மீக்கோ நிசிமிசு.

## மீள்குடியமர்வை துரிதமாக்க 21 பேர் கொண்ட குழு அமைப்பு

கிளிநொச்சி,ஜன.17

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே படையினர் நிலைகொண்டிருக்கும் வீடுகளில் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு 21 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று இரண்டாவது நாளாக நடந்த 'சிரான்' கூட்டத்தில் இந்தக் குழு பற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் குழுவில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கும் விடயத்தில் நிலவிய முரண்பாடு தீர்க்கப்பட்டது. முஸ்லிம் பிரதிநிதி அரச குழுவில் இடம்பெறுவார் என்று முடிவு செய்யப்பட்டது.

அரசு, விடுதலைப் புலிகள், ஐ.நா. அமைப்புக்கள் ஆகிய முத்தரப்புக்களின் சார்பிலும் தலா 7 பேர் இக்குழுவில் இடம்பெறுவர்.

அரசும், ஐ.நா. அமைப்புக்களும்

(14ஆம் பக்கம் பார்க்க)



புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் பிரதிநிதிகளுடன் மீக்கோ நிசிமிசு.

(படங்கள்:தேவராஜன்)

### நல்லூரிலும், தீருவில் சதுக்கத்திலும்

## மூத்த தளபதி கிட்டுவுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜன.17

மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் பத்து வேங்கைகளின் நினைவு தினம் தமிழர் பிரதேசம் எங்கும் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாவட்டங்கள் தோறும் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

குடாநாட்டில் பல பகுதிகளிலும் கேணல் கிட்டுவின் உருவப்படங்கள் வைக்கப்பட்ட பந்தல்களில் மலரஞ்சலி நிகழ்ச்சிகள் நடந்தன. சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள் என்பனவற்றிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

பிரதான நிகழ்வுகள் நல்லூரிலும், வடமராட்சி தீருவில் சதுக்கத்திலும் நடைபெற்றன.



மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பத்தாவது ஆண்டு நினைவுதின நிகழ்வு வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று மாலை 5.30 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் விசேட பந்தல் அமைக்கப்பட்டு கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரை வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த மதிவதனி ஏற்றினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் 'பொங்குதமிழ்' கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.17

'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எழுச்சி நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

தாயகத்தின் சகல மாவட்டங்களிலும் உள்ள 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழுக்களின் பிரதிநிதிகள், யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பல பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற சாரப்பட பொங்குதமிழ் பிரகடனம் ஒன்றும் இந்த நிகழ்வின்போது வெளியிடப்படவிருக்கின்றது.

இதனை ஒட்டி நாளை காலை முதல் யாழ்பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் தமிழர்களின் போராட்ட வரலாறுகளைச் சித்தரிக்கும் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-4)








நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற 'சிரான்' கூட்டத்துக்கு வருகை தந்த ஜப்பானிய தூதர் யசூகி அகாஷியை சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், சமாதானச்செயலணியின் தலைவர் பேணாட் குணதிலகவும், ஜப்பானிய தூதரும் கைகுலுக்கிக்கொள்வதையும் முதல் இரு படங்களிலும் காணலாம்.
தூதுவர் யசூகி அகாஷி, சு.ப.தமிழ்ச்செல்வன், பேணாட்குணதிலக ஆகியோர் செய்தியாளர்களுடன் பேசுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்:தேவராஜன்)

# இந்தியாவின் தவறான எண்ணமே கிட்டுவின் மரணத்துக்குக் காரணம்!

## நினைவுதின நிகழ்வில் ராணிமைந்தன் உரை

வலி.வடக்கு,ஜன.17

இந்தியா எம்மீது கொண்ட தவறான எண்ணம் காரணமாகவே கேணல் கிட்டு அண்ணாவின் மரணம் ஏற்பட்டது. ஆனால், நாங்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களின் பிராந்திய வல்லாதிக்க நலனைப் பாதிப்படையச் செய்பவர்களும் அல்லர்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் குறிப்பிட்டார்.

கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் பத்தாவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள கேணல் கிட்டுப் பூங்காவில் இடம்பெற்றன.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் ந.வன்னியசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசியக்கொடியை களத்தளபதிகளில் ஒருவரான வீரமணி ஏற்றினார். பொதுச்சுடரை நல்லூர் கோட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் ஈஸ்வரன், தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, யாழ். மாவட்ட கடன் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் ஏற்றினர். கேணல் கிட்டுவின் உறவினரான திருமதி இ.வேலுப்பிள்ளை ஈகச்சுடரை ஏற்றி கேணல் கிட்டுவின் படத்துக்கு மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ராணிமைந்தன் கூறியதாவது:-

எம் மண்ணில் நிலையான அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்ற நல்நோக்குடன் வரும்போதே கேணல் கிட்டுவின் மரணம் திட்டமிட்ட முறையில் ஏற்படுத்தப்பட்டது.

எங்களை யாரும் அழிக்கலாம். ஆனால், மக்களின் மனதில் இருந்து மாவீரர்களின் நினைவுகளையோ அன்றி போராளிகளையோ அழித்துவிடமுடியாது.

இன்றும்கூட தலைவரோ அன்றி போராளிகளோ சமாதானத்திற்குத் தடையாக இருக்கவில்லை; இருக்கப்போவதும் இல்லை. இன்றும் நாம் அரசிடம் இம்மண்ணில் நிலையான சுதந்திரமான ஒரு சமாதானம் வரவேண்டும் என்பதிலேயே ஆர்வமாகவும் முனைப்பாகவும் நிற்கின்றோம்.

எம்முடைய அமைதியான வாழ்வை இந்தியா விரும்பவில்லை. விடுதலைப் புலிகளை அது தன்னுடைய பிராந்திய வல்லாதிக்கத்திற்கு ஒரு தடையென்றே கருதுகின்றது. நாம் அவர்களுடைய பிராந்திய நலனுக்கு இடையூறாக இருப்பவர்கள் அல்லர். எமது இலக்கை அடைய வேண்டுமாக இருந்தால் நாம் அனைவரும் ஒன்றாகப் போராட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில்.தமிழ் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்ட செயலாளர் க.குமாரசாமி,யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன், யாழ்.கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.வரதராசா ஆகியோரும் உரையாற்றினர்.

கிட்டுப்பூங்காவில் கிட்டுவின் பழைய வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப் படக் கண்காட்சியும் இடம்பெற்றது. (ஒ-86)

# கண்ணி அகற்ற ஜப்பான் உதவும்

## அந்நாட்டு தூதர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.17

வடக்கு - கிழக்கில் மக்கள் மீளக்குடியமர வசதியாக கண்ணி அகற்றும் பணியில் தனது நிபுணர்களை ஜப்பான் ஈடுபடுத்தவிருக்கின்றது என்று ஜப்பானின விசேட தூதர் அகாசி தெரிவித்தார்.

'சிரான்' அமைப்பின் கூட்டத்தில் பங்குபற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் பல்வேறு திட்டங்களுக்கும் உதவ ஜப்பான் தயாராக இருக்கின்றது. அதற்காக முன்னோடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் அரசு மற்றும் புலிகளின் பகுதிகளில் கண்ணி அகற்றும் பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றது. இந்தப்பணியில் ஜப்பான் நாட்டு அரசசார்பற்ற நிறுவனமும் மற்றும் மூன்று சர்வதேச நிறுவனங்களும் ஈடுபடும். அதற்கு ஜப்பானிய அரசு நிதி உதவி வழங்கும் - என்றார். (ஜ-3-8)

# பாதுகாப்பு சிக்கல்கள் பற்றி மாதம் ஒரு தடவை பேச்சு

## தளபதி கருணாவும் அரசுப் பிரதிநிதியும்

மோதல் தணிவு உபகுழு கலைக்கப்பட்டுவிட்டதால் யுத்தநிறுத்த நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வுகாண எமது சமாதானக்குழு உறுப்பினர் கருணாவும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் மாதம் ஒரு தடவை சந்திக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தநிறுத்த மீறல்கள் மற்றும் பாதுகாப்புச்சிக்கல்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு இருதரப்புத் தளபதிகளுடன் கலந்துரையாடித் தீர்வு காணலாம்.

பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராய எமது சமாதானப்பேச்சுக்குழுவில் இடம்பெறும் தளபதி கருணாவுடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் மாதம் ஒரு தடவையாவது சந்தித்துப்பேச முடியும். இரு தரப்புகளும் இதற்கு இணக்கம் கண்டுள்ளன - என்று உதயனுக்குத் தெரிவித்தார் தமிழ்ச்செல்வன்.

# அரசு - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ சகல மாவட்டங்களிலுமுள்ள - உள்நாட்டில் - இடம்பெயர்ந்தவர்களை - மீளகுடியமர்வு செய்து புனர்வாழ்வளித்தல்.

★ கிளிநொச்சியில் அவசர சிகிச்சைப்பிரிவு அமைப்பு.

★ முல்லைத்தீவு வைத்தியசாலையை மேம்படுத்தல்.

★ அம்பாறை மாவட்டம் பொத்துவில் வைத்தியசாலையைப் புனரமைத்தல்

★ திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, வவுனியா மாவட்டத்தில் கல்மடு மற்றும் செட்டிகுளம், மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் ஆகிய இடங்களில் நீர்ப்பாசனத் திட்டங்கள்.

தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டவரைவுகளை உரிய திட்டங்களாக மாற்றும் பணியை 'சிரான்' அலுவலகம் 27 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து 'சிரான்' உபகுழு உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஓரிரு திட்டவரைவுகள் குறித்து முடிவு மேற்கொள்ளப்படாததால் சகல திட்டங்கள் தொடர்பாகவும் அடுத்த மாதம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் நடைபெறும் 'சிரான்' கூட்டத்தில் முடிவு எடுப்பதெனவும் பின்னர் புனரமைப்பு அபிவிருத்தி திட்ட அறிக்கையை உலக வங்கியிடம் சமர்ப்பித்து தேவையான நிதியை பெற்றுக்கொள்ளது எனவும் 'சிரான்' கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உடனடியாக மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான விசேட குழுவின் பிரதிநிதிகள் நேற்று நியமிக்கப்பட்டனர். அரசு - புலிகள் தரப்பில் தலா 7 பேர், அகதிகளுக்கான ஐ.நா தூதரக, ஐ.நா.அதிகாரிகள் 7 பேர் என மொத்தமாக 21 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கான முஸ்லிம் பிரதிநிதிகள் அரசுத் தரப்பின் 7 பேரினுள் அடங்குவர்.

வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் அபிவிருத்தி திட்ட பணிகளை முன்னெடுப்பதற்கு கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய 7 மாவட்டங்களும் ஒவ்வொரு திட்டப் பணிப்பாளரை நியமிக்கவும் நேற்று இணக்கம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தமது பிரதிநிதிகளை திட்டப்பணிப்பாளர்களாக நியமிக்க வேண்டும் என்று புலிகள் தரப்பு கேட்டுக்கொண்டது.

மன்னார் வவுனியா, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களுக்குத் தமது பிரதிநிதிகளை திட்டப்பணிப்பாளர்களாக நியமிக்கவேண்டும் என்று அரசுத் தரப்பு கேட்டது.

இதனால் திருகோணமலை மாவட்டத்துக்கான திட்டப்பணிப்பாளர் நியமனத்தில் இழுபறி ஏற்பட்டது. இது குறித்து தாய்லாந்தில் இடம்பெறவுள்ள அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களில் ஆராய்வதாக இணக்கம் காணப்பட்டது. இவற்றைவிட 'சிரான்' செயலகச் செயலணி விரிவாக்கம், ஆளணி வளம் என்பவை தொடர்பாகவும் நேற்றுப் பேசப்பட்டது.

நேற்றைய கூட்டத்துக்கு இலங்கை சமாதான முயற்சிக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி, கொழும்புக்கான ஜப்பான் தூதுவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

மக்கள் மீள் குடியமர்வு விடயத்தில் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையான கண்ணிவெடி அகற்றலுக்கும் வடக்கு - கிழக்கு புனரமைப்பு, அபிவிருத்தி திட்டங்களுக்கு தமது அரசு உதவும் என்றனர். (ஜ-3-8-10)

# பல்கலைக்கழக மாணவன் கொலை; 'ட்ரயல் அட்பார்' முறை விசாரணை

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் ஓ.வி.சமந்தவின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை விசேட நீதிபதிகள் குழு ஒன்றின் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது.

இவ்வழக்கு விசாரணையை ஒரு அவசர நடவடிக்கையாகக் கருதி, மூன்று நீதிபதிகள் முன் 'ட்ரயல் அட்பார்' முறையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யுமாறு பிரதம நீதியரசரைக் கோரவிருப்பதாக சொலிசிட்டர் ஜெனரல் சி.ஆர்.டிசில்வா தெரிவித்திருக்கிறார்.

இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் ஐம்பது பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இச் சந்தேக நபர்கள் தொடர்பான அடையாள அணிவகுப்புகள் யாவும் முடிவுற்ற பின்னர் 'ட்ரயல் அட்பார்' விசாரணைக்கு கோரிக்கை விடுக்கப்படுமெனவும் சில்வா தெரிவித்திருக்கிறார். (ஐ)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.17

'பவ்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கை சர்வோதய அமைப்பின் அனுசரணையுடன் மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு இன்று காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலயப் பணிமனைக்கு முன்பாக உள்ள முன்பள்ளி மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

## கணனி நூல் வெளியீட்டுவிழா

ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தினரின் "கணனிமொழி சி++" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ந.செல்வகுமார் எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# வளைகுடா நெருக்கடியை தணிக்க மொஸ்கோ அவசர ராஜீய முயற்சிகள்

பக்தாத்,ஜன.17

வளைகுடாவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைத் தணிப்பதற்கு ரஷ்யா அவசர ராஜீய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காகத் தனது வெளிவிவகார பதில் அமைச்சர் அலெக்ஸாண்டர் சல்டனோவ்வை பக்தாத்துக்கு அனுப்பியுள்ளது ரஷ்ய அரசு.

பக்தாத்துக்கும் வாஷிங்ரனுக்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பை ஏற்படுத்தி அதன்மூலம் நெருக்கடியைத் தீர்க்கும் ராஜீய முயற்சியிலேயே ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

ரஷ்ய பதில் அமைச்சர் அலெக்ஸாண்டர் பக்தாத் வந்திறங்கியதும் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, வளைகுடாவில் இராணுவ மோதல் ஏற்படாமல் இருப்பதற்கான ராஜீய மற்றும் அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டறிய ரஷ்யா விரும்புகின்றது என்று அவர் கூறினார்.

ஈராக்கில் ஆயுதக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள ஐ.நா. அதிகாரிகள் குழுவின் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியுள்ள இந்தநேரத்தில், அலெக்ஸாண்டரின் ராஜீய முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஈராக்மீது தற்போது போர் தேவையில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் தெளிவாகவுள்ளது. ஆனால், இந்த விடயத்தில் அவர்களுக்குள் கருத்துமுரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. அமெரிக்காவின் ஈராக் கொள்கைகளுக்கு பக்கபலமாகச் செயற்பட பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி தயாராக இல்லை. பிரிட்டன் மட்டும் ஏற்கனவே அமெரிக்காவின் அடியொற்றிச் செயற்பட்டுவருகின்றது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியின்றி ஈராக் தாக்கப்படுவதை ரஷ்யாவும் விரும்பவில்லை. இன்னும் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கில் நடத்திவரும் சோதனை தோல்வியில் முடிவடைந்தாலோ, தன்வசமுள்ள பேரழிவு ஆயுதங்களை ஈராக் ஒப்படைக்காவிட்டாலோ போர் ஒன்றே வழி என்று அமெரிக்கா கூறுகின்றது.

இதற்கிடையில் -

ஈராக் போருக்கு உதவி வழங்குமாறு நேட்டோவிடம் அமெரிக்கா புதன்கிழமை உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது. (ம)



கலிபோர்னியாவில் உள்ள கடற்படைத் தளத்தில் இருந்து வளைகுடாவுக்குச் செல்வதற்காக கப்பலில் ஏறும் அமெரிக்கக் கடற்படையினர்.

### முக்கிய திகதிகள்

**ஜன.16 -** ஐ.நா. ஆயுதப்பரிசோதனைக் குழுத் தலைவர், ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் சந்திப்பு.

**ஜன.19 -** ஹன்ஸ் பிளிக்ஸ், ஈராக் உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேசுவார்.

**ஜன.27 -** ஐ.நா. குழுவின் முழுமையான அறிக்கை வழங்கப்படும்.

**ஜன.29 -** குழுவின் அறிக்கையை பாதுகாப்புச் சபை விவாதிக்கும்,

**பெப். நடு. -** ஒரு லட்சத்து 50ஆயிரம் அமெரிக்கப் படைகள் வளைகுடாவில் குவிக்கப்பட்டிருக்கும்.

**பெப்.15 -** போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஐரோப்பா முழுவதும் நடக்கும்.

**மார்ச் முடிவு -** ஈராக் ஆயுதக் களைவுப் பேச்சு பற்றி பிளிக்ஸ ஆலோசனை சமர்ப்பிப்பார்.

## ஈராக்கில் இளைஞர்கள் போர்ப் பயிற்சி!

பக்தாத்,ஜன.17

அமெரிக்கா தாக்கக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளதன் காரணமாக ஈராக்கில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மேலதிகப் போர் பயிற்சிகளைப் பெறுவதற்கு முன்வருவதாக அந்த நாட்டின் ஆளும் கட்சிப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வளைகுடாப் பகுதியிலுள்ள தனது தளங்களில் அமெரிக்கா படைகளைக் குவித்து வருகின்றது. யுத்தக் கப்பல்களும் வளைகுடாப் பகுதிக்கு நகர்த்தப்படுகின்றன. பெப்ரவரி மாதத்திற்குள் ஒன்றரை லட்சம் அமெரிக்க

உலக அரங்கில்

இராணுவ[illegible] அங்கு குவிக்கப்பட்டுவிடுவ[illegible]று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து போர் மூண்டால் அமெரிக்கப் படைகளுடன் மோதுவதற்கென ஈராக்கும் தயாராகி வருகின்றது. இதற்காக ஏற்கனவே இராணுவப் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தாமாகவே முன்வந்து மேலதிகப் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

ஜெருசலேம் நகரை இஸ்ரேலிடமிருந்து கைப்பற்றுவதற்காக பாத் இராணுவம் என்ற பெயரில் ஒரு படையை சதாம் உருவாக்கியிருந்தார். அதில் 70 லட்சம் படையினர் இருக்கின்றனர். அவர்களும் இப்போது அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகப் போராடத் தயாராகி வருகின்றனர்.

# ஆயுதங்களைத் தேட அவகாசம் தராமல் ஈராக்கை தாக்குவது தவறு

## ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் தெரிவிப்பு

ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளனவா என்று தேடிக் கண்டுபிடிப்பதற்கு மேலும் சிலமாத கால அவகாசம் தேவை. எங்களுக்குப் போதுமான அவகாசம் தராமல் ஈராக்கைத் தாக்குவது தவறு. அது எங்களுக்குக் கவலையை அளிக்கின்றது.

- இவ்வாறு ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹன்ஸ பிளிக்ஸ் தெரிவித்துள்ளார்.

ஒன்றரை மாதங்களுக்கு மேலாக ஈராக்கில் ஐ.நா. அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். எனினும், அங்கு பேரழிவு தரும் ஆயுதங்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் எதனையும் அவர்கள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. அதேசமயம், ஈராக்கிடம் இருந்ததாகக் கூறப்படும் பேரழிவு தரும் ஆயுதங்களை அந்த நாடு அழித்துவிட்டதற்கான சான்றுகளும் இதுவரை கிடைக்கவில்லை என்று ஐ.நா. அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தநிலையில், ஈராக்மீது போர தொடுப்பதற்கான முழு ஏற்பாடுகளையும் அமெரிக்காவும் பிரிட்டனும் செய்துவருகின்றன. வளைகுடாப் பகுதியிலுள்ள தனது தளங்களில் அமெரிக்கா துருப்புக்களைக் குவித்து வருகின்றது. இதனையடுத்தே, ஹன்ஸ் பிளிக்ஸ் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஈராக்கில் முழுமையான ஆயுத சோதனை நடத்தி முடிப்பதுதான் இந்தப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண உதவும். அவ்வாறு முழுமையாக சோதனை நடத்திமுடிக்க இன்னும் சில மாதங்கள் செல்லும். இதற்கான கால அவகாசத்தைக் கொடுக்காமல் ஈராக்மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுவது எமக்கு கவலையை அளித்துள்ளது.

அமைதியான முறையில்தான் ஈராகிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று பல நாட்டு மக்களும் விரும்புகின்றார்கள். போரை யாரும் விரும்பவில்லை. இருந்தபோதிலும், அமெரிக்க ஜனாதிபதி என்ன சொல்கின்றாரோ அதற்கு நான் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆயுதம் தயாரிப்பது தொடர்பான பொருள்களை ஐநாவின் தடையையும் மீறி ஈராக் இறக்குமதி செய்துள்ளது. இதனை நாம் கண்டறிந்துள்ளோம். இப்படி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டனவா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

அதேவேளை -

ஈராக்கிடம் தடைசெய்யப்பட்ட பேரழிவு தரும் ஆயுதங்கள் எவையும் இல்லை என்றும் உறுதி அளிக்க முடியாது.

- இவ்வாறு பிளிக்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)



ஹன்ஸ் பிளிக்ஸ்.

# வீரர்கள் நினைவாலயத்துக்கு ஜப்பானியப் பிரதமர் விஜயம்

டோக்கியோ, ஜன.17

ஜப்பானில் இரண்டாம் உலகப்போர் உட்பட பல்வேறு போர்களில் உயிரிழந்த போர் வீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடத்துக்கு பிரதமர் ஜூனிரோ கொய்சுமி சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். அவரது இச்செயல் தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

தலைநகர் டோக்கியோவிலுள்ள யாசுகுனி எனப்படும் இந்த நினைவிடம், இராணுவ ஆட்சியின் சின்னமாக விளங்குகின்றது. 1953ஆம் ஆண்டிலிருந்து நடந்த பல போர்களில் 25 லட்சம் ஜப்பானிய வீரர்கள் உயிரிழந்துள்ளார்கள். அவர்கள நினைவாக இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது.



ஜப்பானியப் பிரதமரும் (இடது) அவரது கட்சி ஆதரவாளர்களும்.

இரண்டாம் உலகப் போரின் போது சீனா, கொரியா உட்பட கிழக்காசிய நாடுகள் பலவற்றை ஜப்பான் ஆக்கிரமித்தது. இதனால், இராணுவ ஆட்சியின்சின்னமாக விளங்கும் யாசுகுனி கோயிலுக்குப் பிரதமர் சென்றது சீனாவுக்கும் கொரியாவுக்கும் ஆத்திரத்தைக் கிளப்பிவிடக் கூடும் என்று கருதப்படுகின்றது.

ஜப்பானில் நடக்கவிருக்கும் தேர்தலில் ராணுவத்தின் ஆதரவைப் பெறுவதற்காகவே பிரதமர் கொய்சுமி இந்தக் கோயிலுக்குச் சென்றுள்ளதாக உள்ளூர் அவதானிகள் கூறுகின்றனர்.

ஆனால், ஜப்பான் மீண்டும் போரில் ஈடுபடக்கூடாது என்று உறுதி எடுத்துக்கொள்வதற்காகவேதான் அக்கோயிலுக்குச் சென்று வந்ததாக கொய் சுமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ம)

# வெனிசுலா பிரச்சினை தீர்க்க ஐந்து நாடுகள் கூட்டுக் குழு



வெனிசுலா அதிபர் செவாஸ்.

மட்றிட்,ஜன.17

வெனிசுலாவில் கடந்த 7 வாரங்களாகத் தொடர்ந்துவரும் எதிர்க்கட்சிகளின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதற்கு ஐந்து நாடுகள் இணைந்த குழு ஒன்றை அமைத்துள்ளன.

பிரேஸிலில், சிலி, ஸ்பெயின், மெக்ஸிக்கோ, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் இணைந்தே இந்தக் குழுவை அமைத்துள்ளன. 'வெனிசுலாவினுடைய நண்பர்கள்' என்று இந்தக் குழு அழைக்கப்படுகின்றது.

வெனிசுலாவின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண ராஜீய ரீதியில் என்ன செய்ய வேண்டும் என இந்தக் குழு ஆலோசித்துச் செயற்படும். தற்போது இந்தக் குழுவுடன் அமெரிக்காவும் இணைந்து கொண்டுள்ளது.

வெனிசுலா அதிபர் சவாஸைப் பதவி விலகக்கோரி எதிர்க்கட்சிகள் நடத்திவரும் போராட்டம் 46 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாட்டின் பொருளாதாரமே முடங்கிப்போயுள்ளது. ஆனால், இந்த மிரட்டலுக்கு பயந்து அதிபர் பதவி விலகுவதாக இல்லை.

இந்த நிலைமையத் தீர்க்க குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே அதிபர் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு 'வெனிசுலாவினுடைய நண்பர்கள்' குழு சமாதான முன்மொழிவு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. (ம)




Study in CANADA

Experience the North American culture, enhance your career prospects, study at Computek

-Enterprise Network Engineering

-Software Engineering, Management Diploma

Interviews:

Jaffna : 19 Jan, Sunday, 9am

Colombo : 27 Jan, Monday, 4pm

For appointments & Location contact by phone or e-mail:

Hotline : 0777-107476

Jaffna : 021-222 2325

Toronto : 001 416 441 2900

Scarborough : 001 416 285 9941

e-mail : tham@computek.edu

நீங்களும் கனடாவில் உயர் கல்வியைப் பெற விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Computek

INSTITUTE OF TECHNOLOGY

www.computek.edu

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ள 10பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்க இணைந்துகொண்ட சுமார் 160 மாணவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம், யுனிசெவ நிறுவனப் பிரதிநிதி செல்வி செலின், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.இரகுநாதன் ஆகியோர் அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து கற்றல் உபகரணங்களைக் கையளித்தனர். இது தொடர்பான வைபவம் ஒன்றும் மருதங்கேணி இந்துதமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. (எ-182)

# மருதங்கேணி ஆஸ்பத்திரியில் மருத்துவர் இன்றி மக்கள் அவதி

வடமராட்சி கிழக்கு,ஜன.17

மருதங்கேணி கிராமிய அரசினர் வைத்தியசாலையில் ஊழியர் பணிக்கமர்த்தப்பட்டபோதிலும் டாக்டர் கடமைக்கு சமுகமளிக்காததினால் வைத்தியசாலை இயங்க முடியாதநிலையில் உள்ளது.

2001ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் கடமையாற்றிய ஊழியர்கள் இம்மாதம் தொடக்கம் மீண்டும் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். ஆனால் இவ்வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்ட டாக்டர் இதுவரை கடமைக்குச் சமுகமளிக்கவில்லை.

இதேவேளை - மேற்படி வைத்தியசாலை யுத்த நிலைமைகளின் போது சேதமடைந்தமையினால் தாளையடியில் உள்ள கட்டடமொன்றில் அதனை இயக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-182)

## வாயில் வைத்து பட்டாசு கொளுத்திய சிறுவன் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜன.17

நண்பர்களிடம் பந்தயம் கட்டிக்கொண்டு, தனது வாயில் பட்டாசை வைத்துக் கொளுத்திய சிறுவன் இரு உதடுகளும் கிழிந்து படுகாயமடைந்தான். தெய்வாதீனமாக வாயின் உட்பகுதிகளில் காயங்கள் ஏற்படவில்லை.

பொங்கல் தினமான நேற்றுமுன்தினமிரவு 7மணிக்கு உடுவில் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுவில் 'டச்' வீதியைச் சேர்ந்த சின்னராசா சுமரஜித் (வயது 12) என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான். படுகாயமடைந்த அவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஒ-15)

உ
குருமயம்

## ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வருடாந்த மகா குருபூசை

காலம் :- நாளை (18.01.2003) சனிக்கிழமை
இடம் :- கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்
தலைமை :- திரு.இ.குழந்தைவடிவேலு (ச.நீ.)
*(தலைவர், ஸ்ரீசச்சிதானந்தா ஆசிரமம்)*
ஆசியுரை :- சுவாமி ஸ்ரீராஜ்குமார் *(காமகோடி காயத்திரி பீடம்)*

### நிகழ்ச்சி நிரல்

காலை 8.00 மணி (புதிய நேரம்) - பஜனை
காலை 10.00 மணி - அபிஷேகம்
காலை 10.30 மணி - விசேட பூசை
காலை 10.45 மணி - வரவேற்புரை திரு.க.செல்வராசா (G.S.) *(பொதுச்செயலாளர்)*
காலை 11.00மணி - "ஆசிரமப் பணிகள்" திரு.நா.திருச்செந்திநாதன் *(உப செயலாளர்)*
காலை 11.15 மணி - "சுவாமிகளின் பெருமை" *வைத்திய கலாநிதி* வ.சின்னப்பு
காலை 11.30மணி - "ஆசிரம வளர்ச்சி" *வைத்திய கலாநிதி* கே.ரி.எஸ்.சபாநாதன்
காலை 11.45மணி - "இளைஞரும் துறவறமும்" சுவாமி ஸ்ரீராஜ்குமார் *(காமகோடி காயத்திரி பீடம்)*
12.15மணி - பாலர் பாடசாலைக்கான அன்பளிப்பு வழங்கல் திரு.கு.கங்கைவேணியன் *(வேணி களஞ்சியம்)*
12.30மணி - அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கல் மாணிப்பாய் மருதடி விநாயகர் அறங்காவலர் சபை
12.45மணி - நன்றியுரை ஆசிரம பூசகர் கந்தையா சுவாமிகள்

தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும்.

அடியார்கள் இவ்வைபவத்தில் கலந்து குருவருள் பெற்றுச் செல்லுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

இ.குழந்தைவடிவேலு (ச.நீ.)
*தலைவர் சச்சிதானந்தா ஆசிரமம், கைதடி.*
(13205)
க.செல்வராசா (G.S.)
பொதுச்செயலாளர்.

**O-REX பல் கட்டுமிடம்**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

- பல்கட்டுதல் (சங்குப்பல்)
- மிதப்பு பற்களுக்கு கிளிப்போடுதல் (இலகு நுட்பமுறை)
- உடைந்த பற்கள் ஒட்டிக் கொள்ளுதல்

ஆகிய சேவைகள் நீண்டகால அனுபவம்மிக்க டாக்டரினால் மேற்கொள்ளப்படுகின்றன.

*குறிப்பு:* உத்தரவாதத்துடன் குறைந்த கட்டணத்தில் செய்துகொள்ளலாம்.

(13249) - நிர்வாகி.

காவடி மார்க் கற்பூரம் காவடி மார்க் கற்பூரம் காவடி மார்க் கற்பூரம் காவடி மார்க் கற்பூரம்

**நின்று நிலைக்கும் ஜோதிமயம் காவடி மார்க் கற்பூரம்**

காவடி மார்க் கற்பூர பக்கட்களுடன் 2003க்கான வர்ணப்படம் அடங்கிய பொக்கட் கலண்டர்கள் இலவசமாக வழங்கப்படுகிறது





**கற்பூரம் என்று கேட்காதீர்கள் காவடி மார்க் கற்பூரம் என்று கேட்டு வாங்குங்கள்**

கடந்த 35 ஆண்டுகளாக உங்கள் நன்மதிப்பைப் பெற்றது காவடி மார்க் கற்பூரம்

ஏக விநியோகஸ்த்தர்கள்:
பிரபா டிரேடிங் கம்பனி
இல. 31 கபோஸ் லேன், கொழும்பு 11. தொ.பே. 329426, 422750.

Manufactured By
McSons Organics (PVT) LTD
672, Galle Road Ratmalana (Off Mayura mawatha)
Tel 636818

காவடி மார்க் கற்பூரம் காவடி மார்க் கற்பூரம் காவடி மார்க் கற்பூரம் காவடி மார்க் கற்பூரம்

## கணனி வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

**Certificate Courses**

1. Ms Word
2. Ms Excel
3. Windows 98
4. Page Maker

Duration 3 Months

இடம்: ஏழாலை வசந்தநாகபூஷணி அம்மன் ஆலயம் முன்பாக.

*நிர்வாகி*
(13300) R.பாஸ்கரன்.

## நீங்காத நினைவில் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

நயினை மண்ணில்
01 - 01 - 1928



அம்பிகை அடியில்
20 - 12 - 2002

நயினை

### வேலுப்பிள்ளை அட்சலிங்கம்

*(உரிமையாளர், ஸ்ரீ நாகை இன் கொழும்பு - 12)*

20.12.2002 அன்று கொழும்பில் அம்பிகையின் அடிசேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (18.01.2003) சனிக்கிழமை அதிகாலை நயினாதீவு தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*5 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (13303)
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ள்ளைகள், உறவினர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

27.01.2002 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### விசுவலிங்கம் அன்னப்பிள்ளை



அவர்களது வீட்டுக்கிருத்தியம் இன்று (17.01.2003) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*8ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (C/26097)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை 14.01.2003 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.எம்.கணபதிப்பிள்ளை (நிறுவுநர், V.M.K. Jewellers) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புச் சகோதரியும், சிவபாக்கியம், ஜெயலட்சுமி (Canada), புலேந்திரன் (உரிமையாளர், V.M.K. Jewellers), காலஞ்சென்ற குலேந்திரன் (உரிமையாளர், V.M.K. Jewellers), சீதாலட்சுமி (Canada), ராதாலட்சுமி (Canada) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முன்னாள் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), Dr.யோகேஸ்வரன் (Canada), தினகரன் (Canada) ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் அதிபர், யா/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை), தர்மேந்திரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர், நீர்ப்பாசனத் திணைக்களம் - Canada), நிர்மலராணி, திகழ்மதி யோகதாசன் (பொறியியலாளர், Canada), வசந்தகுமார் (பொறியியலாளர், Canada) ஆகியோரின் மாமியாரும் அகல்யா ராஜகாரியர் (U.K.), கௌசல்யா ஸ்ரீசங்கர் (Canada), லாவண்யா, மீரா ராஜேந்திரன் (FORUT, Jaffna), பார்த்திபன் (Leeds Metropoliton University, U.K.), மாதங்கி, பிரசாந்த், கோகுல், கார்த்திகா, அபராஜிதன், பிரசோதிக்கா, மேனகா (University of Toranto, Canada), ரேகா (Canada), கல்பனா (Canada), ஆதித்தன் (Canada) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சுருதி(U.K.)யின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*52, டச் வீதி,*
*சாவகச்சேரி.*
*T.P.No: 07021 2989* (13292)
வீ.எம்.கே. குடும்பத்தினர்.

உதயன்

# அரசு விரிக்கும் வலை

கசப்பு மருந்துக்கு இனிப்புப் பூச்சுப் பூசிக் கொடுக்கும் முறை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அந்தப் பாணியில் ஒரு குளிசை கொடுத்திருக்கின்றார் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட.

கட்டாய இராணுவ சேவை குறித்து மீண்டும் அவர் வெளியிட்டிருக்கும் கருத்துத்தான் அது.

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல அரசின் உத்தேச திட்டத்தை மெல்ல அவிழ்த்து விட்டிருக்கின்றார் அவர்.

அமைச்சர் மிலிந்த மொறகொட நாடாளுமன்ற அரசியலுக்கு வந்து இரண்டொரு ஆண்டுகள்தான் ஆகின்றன. அமைச்சர் பதவியை ஏற்று ஆக ஒரு வருடம்தான். அமைச்சரவை அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டது கூட அதற்குப் பிறகுதான்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் மிக நெருக்கமானவர். பிரதமர் ரணிலும் அவரது அரசும் எடுக்கும் முக்கிய தீர்மானங்களில் அவரது பங்களிப்பு - செல்வாக்கு - கணிசமாக இருந்துவருகின்றது என்பது ஊரறிந்த உண்மை.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் சமாதானப் பேச்சுக்களில் அரசுத் தரப்புக் குழுவின் தனது 'ஆளாக' மிலிந்த மொறகொடவைத்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நட்டுவைத்துள்ளார்.

அதுமட்டுமல்ல, இந்த சமாதானப் பேச்சுக்கள் மற்றும் அது தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக பிரதமரின் விசேட தூதுவராக இந்தியா, அமெரிக்கா போன்ற முக்கிய நாடுகளுக்குச் சென்று நிலைமையை விளக்கி வருபவரும் அவரே.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சருக்கு அப்பால் - பிரதமருடன் நெருக்கமான தொடர்புகளை உடையவர் என்றவகையில் - இராணுவத்துடனும் இராணுவத் தளபதியுடனும் இணைந்து செயற்பட்டு வருபவரும் அவரே.

அவர்தான் கட்டாய இராணுவ சேவை குறித்து மீண்டும், இரண்டாவது முறையாகக் கருத்துவெளியிட்டிருக்கின்றார்.

இராணுவத்தின் கட்டளை மற்றும் அதிகாரிகள் கல்லூரியின் பட்டமளிப்புவிழா நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியசமயமே கட்டாய இராணுவ சேவை குறித்து அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

பதினெட்டு வயது பூர்த்தியான அனைவரும் இராணுவத்தில் பதினெட்டு மாதப் பயிற்சிக்குக் கட்டாயம் இணையவேண்டும். அதிகாரிகள் தரத்தில் இணைவோருக்கு இன்னும் சற்றுக் கூடுதலான காலம் பயிற்சியளிக்கப்படும். பயிற்சியின் பின்னர் அவர்கள் வழமையான தங்கள் வாழ்க்கைக்குத் திரும்பலாம். ஆனால், அவர்களின் பெயர்கள் இராணுவத் தொண்டர் சேவையில் பேணப்படும். அவசரம் ஏற்படும்போது அவர்கள் சேவைக்கு அழைக்கப்படுவர். இதுதான் அமைச்சர் மிலிந்தவின் யோசனை - திட்டம் - பிரேரணை - எல்லாம்.

இவ்வாறு பயிற்சிபெறுவோர் எந்த நெருக்கடியையும், சிரமத்தையும் எதிர்கொள்ளும் திறமையைப் பெறுவர். இது வாழ்க்கைக்கு உதவும். அவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாட்டுப் பயிற்சி கிட்டும். சமூகத்தில் ஏனையோருடன் இணைந்து வாழும் பண்பை இந்தப் பயிற்சி போதிக்கும் - இப்படி கட்டாய இராணுவ சேவை குறித்து பல்வேறு நன்மைகளை எடுத்துக்கூறியிருக்கிறார் அவர்.

இது கசப்பு மருந்துக்கு மேல் பூசப்படும் இனிப்பு விவகாரம். உள்ளே கசப்பு மருந்துபோல - ஒளிந்திருக்கும் தமது இரகசியத் திட்டத்தை - மூடி மறைக்க முயல்கின்றார் அவர்.

இராணுவ ரீதியில் புலிகளை முறியடிக்க முடியாது என்பது புரிந்ததால்தான் பேரினவாத அரசுகள் தமது இராணுவ அடக்குமுறை முயற்சிகளைக் கைவிட்டு சமாதான பேச்சு முயற்சிக்கு இறங்கிவர வேண்டியதாயிற்று.

இராணுவ ரீதியில் அரசுத் தரப்பு பின்னடைவை சந்தித்ததற்கு இராணுவத்தில் ஏற்பட்ட ஆள்பற்றாக்குறையும் படைகளை விட்டு துருப்புகள் தப்பியோடியதும் முக்கிய காரணங்கள்.

இந்தப் பிரச்சினையை சமாளித்து, சமாதானப் பேச்சு நடக்கும் அமைதிச் சூழலில் இராணுவக் கட்டமைப்பை ஸ்திரப்படுத்த வலை விரிக்கின்றது அரசு.

யுத்த காலத்தில் - பேரழிவுகள் பற்றிய பேரழிவுச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் - படைகளைவிட்டு ஆள்கள் தப்பியோடிக் கொண்டிருக்கும் வேளையில் - கட்டாய இராணுவச் சேவைத் திட்டத்தைக் கொண்டுவந்தால் பெரும் எதிர்ப்புக் கிளம்பி அதனைச் செயற்படுத்த முடியாமற் போகும்.

எனவே, சமயம் பார்த்துத் தந்திர நடவடிக்கை எடுக்கத் தயாராகின்றது அரசு. அதைத்தான் அமைச்சர் மிலிந்தவின் கட்டாய இராணுவ சேவை யோசனை, கோடிட்டுக் காட்டுகிறது என்பதை முன்னரும் இப்பத்தியில் எடுத்துக் கூறியிருந்தோம்.

பேச்சு நடத்தும் தமிழர் தரப்பு உஷாரடைய வேண்டிய விவகாரம் இது.



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை அண்மையில் ஊர்காவற்றுறையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பணிமனைப் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்வதையும் - தீவக உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் நாடாவை வெட்டி பணிமனையைத் திறந்துவைப்பதையும் - படங்களில் காணலாம்.

# குடாநாட்டில் மனிதவள ஆளணியை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை

## பிரத்தியேக நிலையம் அமைக்கப்படும்

வலி.வடக்கு,ஜன.17

வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தரும் நடவடிக்கையாக மனிதவள ஆளணியினரை ஒழுங்குபடுத்துவதற்கான நிலையம், தொழில் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையம் ஆரம்ப கட்டமாக வாரத்தில் ஒருநாள் பிரதேச செயலகங்களில் இயங்குவதற்கு யாழ்.மாவட்ட தொழில் உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் இந்த நடவடிக்கைக்கு வசதியாக மூன்று வலயங்களாகப் பிரிக்கப்படவுள்ளன. இதன் மூலம் குறிப்பிட்ட தினங்களில் சம்பந்தப்பட்ட அலுவலரை பிரதேச செயலகங்களில் சந்திக்க பொதுமக்களுக்கு வசதி ஏற்படுத்தப்படும்.

இதன் அடிப்படையில் "ஏ" வலயத்தில் பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர் பிரதேச செயலகங்கள் அடங்குகின்றன.

இப்பிரதேச செயலகங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஆளணியினரை ஒழுங்குபடுத்தும் அலுவலரை பொதுமக்கள் சந்திக்கலாம். "பி" வலயத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி உதவி அரச அதிபர் காரியாலயங்கள் மற்றும் வேலணை, தெல்லிப்பழை பிரதேச செயலகங்களில் வியாழக்கிழமைகளில் ஆளணி ஒழுங்குபடுத்தும் அலுவலரை சந்திக்கலாம்.

"சி" வலயத்தில் உள்ள யாழ்ப்பாணம், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெள்ளிக்கிழமைகளில் ஆளணியினரை ஒழுங்குபடுத்தும் அலுவலர்களைச் சந்திக்கமுடியும்.

மனிதவள ஆளணியினரை ஒழுங்குபடுத்தும் அலுவலர்கள் நான்கு வகையாக கடமைகளை மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

★ வேலைவாய்ப்புகள் இன்றி இருப்பவர்களை அடையாளம் காணுதலும் அவர்களின் தொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டுதல்களை மேற்கொள்ளுதலும்.

★ வேலை தேடுபவர்களுக்கு வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள உதவிசெய்தல்.

★ சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவிரும்புவர்களுக்கு அவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்குதலும் ஆற்றுப்படுத்தலும்.

★ பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு சுயதொழில் மற்றும் தொழில் சம்பந்தமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

ஆகிய செயற்பாடுகளை இந்த அலுவலர்கள் மேற்கொள்ளவுள்ளனர். (ஒ-86)

# மகளிர் நலன்களைப் பேண தனி அலுவலர்கள் நியமனம்

வலி.வடக்கு,ஜன.17

பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பணிமனைகளில் மகளிர் நலன்கள் தொடர்பாக தனி அலுவலர் ஒருவர் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்.

மகளிர் விவகார அமைச்சினால் இதற்கான சுற்று நிருபம் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகள் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பொது நிர்வாக உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போது இந்த அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களில் ஒருவரே தனது கடமைகளுடன் மேலதிகமாக இப்பணிப் பொறுப்பையும் ஏற்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி அலுவலகங்களில் இந்த உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் இலகுவில் அணுகக்கூடியவாறு பெயர்ப்பலகையுடன் பிரத்தியேக இடத்தில் அமர்ந்து இப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-86)

## குடாநாட்டு தொழிலாளர் நலன்கருதி

# தொழில் நீதிமன்றம் அமைக்க அமைச்சு விரைவான நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்குடாநாட்டுக்கான தொழில் நீதிமன்றம் ஒன்றினை அமைப்பதற்கு தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டில் தொழில் நீதிமன்றங்கள் இயங்காததால், இங்குள்ள தொழிலாளர்களால் அவர்கள் தொழில்புரியும் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கெதிராகச் செய்யப்பட்ட பல முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் உள்ளன.

ஆகவே, இப்போது இங்கு தொழில் நீதிமன்றம் ஒன்று அவசியமென யாழ்.மாவட்ட தொழில் திணைக்கள அதிகாரிகள் தமது தலைமையகத்துக்கும் தொழில் அமைச்சுக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்தே, தொழில் அமைச்சு இங்கு தொழில் நீதிமன்றம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

முன்னர் குடாநாட்டில் தொழில் நீதிமன்றம் இயங்கியபோது, அங்கு வழங்கப்பட்ட தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட தொழில் திணைக்களம் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# திருச்சி – பலாலி – கொழும்பு விமானச் சேவைக்கு திட்டம்

திருச்சி - பலாலி - கொழும்பு விமான நிலையங்களிடையே விமானசேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கன் விமானச்சேவை நிறுவனம் திட்டமிட்டிருப்பதாக அதன் தலைவர் குமாரபெல்பொல தெரிவித்திருக்கிறார்.

இதனை விட விமானப்படையினருடன் இணைந்து வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்காக உள்நாட்டு விமானத் தளங்களுக்கு வாடகை விமானச்சேவைகளை நடத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையமும் உள்நாட்டு விமானத் தளங்களும் நவீன மயப்படுத்தப்பட்ட பின்னர், வசதி படைத்த சிறு விமானங்களைப் பயன்படுத்தி இச்சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் சொன்னார். (ம)

# ஜெயவர்த்தனபுர பல்கலை 27ஆம் திகதி மீள ஆரம்பம்

கொழும்பு,ஜன.17

பகிடிவதை காரணமாக படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவன் ஓவிட்டிக்கல சமந்தவின் மரணத்தைத் தொடர்ந்து இரண்டு மாதங்களாக மூடப்பட்டிருந்த ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் எதிர்வரும் 27ஆம் திகதி திறக்கப்படுமெனத் தெரியவருகின்றது.

சுமுகமான சூழ்நிலையின் கீழ் பல்கலைக்கழகத்தைத் திறக்க நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதாகவும், பெப்ரவரி மாதம் முதல் விரிவுரைகள் ஆரம்பமாகுமெனவும் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் அமைதியை நிலைநாட்ட பொலீஸாருடன் பல்கலைக்கழக நிர்வாகம் பல கலந்துரையாடல்களை நடத்தியது.

இதற்கமைய பல்கலைக்கழக வளாகத்தினுள் பொலீஸ் காவலரண் ஒன்று அமைப்பதெனவும் பல்கலைக் கழகத்தைச் சுற்றிப் பொலீஸார் காவல் நடவடிக்கைகளில் ஈடுபடுவரெனவும் அவர் தெரிவித்தார்.

அமைதியான சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தைத் திறந்து விரிவுரைகளை நடத்த நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் இடம்பெற்று வந்த பகிடிவதை தற்போது இராணுவ முகாம்களிலும் இடம்பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ)

**நாளை**

தை 04
சனிக்கிழமை
(18.01.2003)
திதி : பூரணை
பிற்பகல் 4.57 வரை.
நட்சத்திரம்: புநர்பூசம்
பிற்பகல் 3.41 வரை.
பூரணை விரதம்
சுபநேரம் : 3.35 - 5.05
ராகுகாலம் : 9.35 - 11.05
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

எப்பொழுதும் அச்சப்பட்டுக் கொண்டிருப்பதை விட அபாயத்தை ஒரு முறை சந்தித்துவிடுவது மேல்.

# கரடி கடித்துக் குதறியதில் வன்னி விவசாயி படுகாயம்!

வயலுக்குச் சென்றவரை, கரடி ஒன்று கடித்துக் குதறிய சம்பவம் மாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மாங்குளம் காட்டுப்பிரதேசத்தின் அருகேயுள்ள புதுவிளாங்குளத்தில் நடந்த இச்சம்பவத்தில் ஞானப்பிரகாசம் கணேசராசா என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

கடந்த திங்கட்கிழமை காலை இவர் வயலுக்குச் சென்றுவிட்டு நண்பகலில் வீடுதிரும்பப் புறப்பட்டதாகவும் -

வரும் வழியில் இருகுட்டிகளுடன் கரடி ஒன்று எதிர்பட்டு அவரை அடித்து வீழ்த்தி இடது கையை கடித்துக் குதறியதாகவும் - அப்போது அவர் எழுப்பிய அவலக்குரலைக் கேட்டு அப்பகுதி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஓடிவந்து காப்பாற்றியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

காயப்பட்டவர் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-83)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 - 03 - 1948

இறப்பு 08 - 01 - 2001

## திருமதி குகதாசன் இந்திராணி

**திதி: 17-01-2003**

*பத்துமாதம் சுமந்தெடுத்து - எம்மை*
*பாசத்தால் வளர்த்தெடுத்த - அன்னையே!*
*இன்று நாம் உன்னை இழந்து*
*ஈராண்டுகள் ஆனதம்மா!*
*உம் அன்புக் கரங்களால்*
*எம்மைக் கட்டியணைத்து - எம்மை*
*முத்தமிட்ட நாள்களெல்லாம்*
*என்றுதான் திரும்பிடுமோ?*
*அம்மா உன் இதமான இதயத்தால்*
*எம்முடன் பேசிக் குலாவிய அந்த*
*இனிய நினைவுகள் யாவும்*
*காற்றோடு காற்றாக எம்*
*இன்ப உணர்விலே - இன்றும்*
*பேசிக்கொண்டுதான் இருக்கின்றன!*
*இயற்கையின் நியதியினால்*
*காலன் உம்மைக் கவர்ந்து சென்றாலும்*
*எம் உயிர் உள்ளவரை*
*எம் அன்புத் தெய்வம்*
*நீயின்றி வேறுயாருமில்லையம்மா!*

*"ஜெயபதி",*
*"பொலீஸர் வீடு",*
*பலாலி வீதி, திருநெல்வேலி.*

**குகதாசன்** (கணவர்),
**சதீஸ், ஜினேஸ்குமார்.** (மகன்கள்).

(13262)

# 35ஆம் நாள் நினைவு தினமும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 12 - 05 - 1938

உதிர்வு 17 - 12 - 2002

## திருமதி பூரணலட்சுமி சுப்பிரநாதன்

***அன்பின் உறைவிடமே! பண்பின் இருப்பிடமே!***
***குடும்பத்தின் குலவிளக்கே!***
***இனிமையாய்ப் பேசி வந்தோரை வரவேற்கும் தாயே!***
***எல்லோர் உள்ளத்திலும்***
***நிறைந்திருக்கும் எம் இனிய அம்மாவே!***
***உம்மைப் பிரிந்து வாடும் எம்மைத் தேற்றுவாரற்று***
***பரிதவிக்கவிட்டு நீ எங்கே சென்றாயோ?***

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல*
*இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.*

அன்னார் நோயுற்றபோது உதவியவர்களுக்கும் மறைவின் பின்பு அவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் தந்தி, தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். அத்துடன் அன்னாரது அந்தியேட்டிக்கிரியை இன்று (17. 01. 2003) வெள்ளிக்கிழமையும் வீட்டுக்கிருத்தியம் நாளைமறு தினம் (19. 01. 2003) ஞாயிற்றுக்கிழமையும் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

*அராலி வடக்கு,*
*செட்டியார்மடம்,*
*வட்டுக்கோட்டை.*

**ஆ.சுப்பிரநாதன்** (கணவர்)
**சு.சந்திரமோகன்** (மகன்).

(சி-26053)

---

## விற்பனைக்கு

மோட்டோரோலா
தொலைபேசி ஒன்று
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
K.இராஜகுலசிங்கம்
இராஜவீதி, நவக்கிரி, புத்தூர்.

(13228)

---

## சித்திரப் பயிற்சி

**2005 A/L**

தரம் 6 - O/Lவரை
ஆரம்பமாகியுள்ளது.

***I.A.T.***

154/31, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

(13263)

---

## தேவை

கொழும்பில் உள்ள
தொழிற்சாலை ஒன்றுக்கு
நல்ல அனுபவமுள்ள லேத்மன்
(Lathe Man) தேவை.
நேரில் உடன் வரவும்.

**செல்லா சன்ஸ்**

118 (198), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(13228)

---

## தேவை

யாழ்ப்பாண உணவுவகைகள் திறம்படச் சமைக்கக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் சமையலாள், மலசல கூடம் சுத்திகரிப்பவர், பூந்தோட்டம் பராமரிப்பவர் தேவை.
தொடர்பு: இல.40, கண்டி வீதி,
சுண்டுக்குளி
(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம முன்னால்).
யாழ்ப்பாணம். (13187)

---

## கண்ட கற்கள் தேவை

3", 4", 6", 9" அளவுகளுள்ள பெரிய கற்கள் 1000 டிராக்டர் லோட் தேவை. விலை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.
தொடர்பு:
பாமினி என்ஜினியர் அன் கொன்றக்ட்ஸ்
(C.T.B. அருகில்)
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(13203)

---

## யாழ்.பல்கட்டும் நிலையம்
## JAFFNA DENTAL LAB

☆ சீன முறையில் சங்குப் பற்களைக்கட்டிக்கொள்ள,
☆ மிதப்புப் பற்களுக்குக் 'கிளிப்' பொருத்திக்கொள்ள,
☆ முன்பு கட்டிய பற்களை மீளமைப்புச் செய்துகொள்ள

நாடுங்கள்:

முதலாம் குறுக்குத்தெரு,
நெல்லியடி.

*கிளை:* பிரதான வீதி,
உடுப்பிட்டி.

(13242)

---

### உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளை
### பொது அறிவுப் போட்டி - 2002 முடிவுகள்

பரிசு பெறுவோர் விவரம்:

(1) முதலாம் பரிசு ரூபா 2000/=
**செல்வி தி.ஷாலினி**
வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

(2) இரண்டாம் பரிசு ரூபா 1500/=
**திரு.கு.அரசேஸ்வரன்**
கலைமகள் வீதி, நல்லூர்.

(3) மூன்றாம் பரிசு ரூபா 1000/=
**செல்வி க.அனுசியா**
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

*பரிசில்கள் மற்றும் சித்தியெய்தியோருக்கான சான்றிதழ்கள் நிகழ்ச்சியொன்றில் வைத்து வழங்கப்படவுள்ளன.*

*கல்விப் பகுதி "பரமநாதன் இல்லம்"*
*மானிப்பாய் வீதி, திாவடி,*
*கொக்குவில்.*

**ஆ.சண்முகலிங்கம்**
தலைவர்
உ.த.ப.இயக்கம்,
இலங்கைக் கிளை.

(13227)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண கூட்டுறவுத் திணைக்களத்தின், கூட்டுறவுப் பரிசோதகா
திரு.ஐ.நாகேஸ்வரனின் அன்புத் தந்தையார்

## சி.ஐயாத்துரை

அவர்கள் 14-01-2003இல் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு, எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவிக்கின்றோம்.

யாழ்.கூட்டுறவுத் திணைக்கள
நலன்புரி கூ.ச.அங்கத்தவர்கள

(சி-26084)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

நிகழும் சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5ஆம் நாள் வெள்ளிக்கிழமை 20.12.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### திருமதி தரும்பாலு குணலட்சுமி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (17.01.2003) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வேலணை வெள்ளைக்கடற்கரை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வு 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.179, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதர சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்.

(13277)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

## வீரவாகு பூமணி

| அன்னை மடியில் | ஆண்டவன் அணைப்பில் |
|---|---|
| 1925 ✦ 06 ✦ 19 | 2002 ✦ 12 ✦ 18 |

*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்*
*அம்மா என்றழைக்க உறவு ஒன்றில்லை*
*வசந்தம் தவழ்ந்த இல்லத்தில்*
*வந்தனம் செலுத்த நீங்கள் இல்லையே!*
*உயிருக்கு உயிராக, உறவுக்கு பலமாக*
*திரு விளக்காய் இருந்த தென்றல் வீசி*
*அன்பையும், பண்பையும் அள்ளி வளர்த்து*
*எம்மை இன்பமாக வாழவைத்த தெய்வமே!*
*எங்களை ஆறாத்துயரில் மூழ்கவிட்டு*
*எங்கம்மா சென்றீர்கள் ?*
*எம் நெஞ்சம் வேதனையால் விம்மி*
*ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்*
*எம் உயிர் உள்ளவரை மறையாதம்மா*
*உங்கள் நினைவு.*

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

18.12.2002 அன்று சிவபதமடைந்த எங்கள் குலதெய்வத்தின் மறைவுச்செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தி இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும், பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள், தொலைபேசி, தபால், தந்தி, மின்னஞ்சல்மூலம் அனுதாபமும், ஆறுதலும் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியும் ஒத்தாசைகளும் புரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (17.01.2003) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு நயினாதீவு கங்காதரணியிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.00மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'பூமணி அகம்'*
*7ஆம் வட்டாரம், நயினாதீவு.*

**கணவர், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(13282)

# புத்தாண்டில் உங்கள் பலன்கள்

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை)

புதுமை செய்வதிலும் புரட்சி செய்வதிலும் புகழ் கொடி நாட்டும் மிதுன ராசி வாசகர்களே! மிகப் பெரிய காரியங்களையும் மிக எளிதில் செய்து முடிப்பீர்கள். உங்கள் மூளை மின்னல் வேகத்தில் செயல்படும். அடுத்தவர்களுக்கு யோசனை சொல்வதில் வல்லவர்களாக விளங்கும் நீங்கள் உங்களைப் பற்றி ஒரு நிமிடம் கூட சிந்திப்பதில்லை. உடல் பலத்தைக் காட்டிலும் உங்களுக்கு மூளை பலமே உறுதுணை புரியும். ஆன்மீகத்தின்மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருப்பீர்கள்

உங்களிடம் காரியம் சாதித்துக் கொள்ளவேண்டுமானால் உங்களைப் போற்றி புகழ வேண்டும். உங்களுக்கு இந்த புத்தாண்டு பொன் கொழிக்கும் ஆண்டாக இருக்குமா? ஏழரைச் சனியில் விரயச் சனி நடக்கும் உங்களுக்கு விரயங்கள்தானே அதிகம் நடைபெறும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இரண்டாவது சுற்று நடப்பவர்களுக்கு அற்புதமான பலன்களை சனி வழங்கலாம்.

### சனிப்பெயர்ச்சிக் காலம்

இதுவரை உங்கள் ராசிக்கு ஏழரைச் சனியில் விரயச் சனியாக சஞ்சரித்து வந்த சனி பகவான் 22.5.2003 அன்று ஜென்மச் சனியாக சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 'அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி' 'சிரமப்படுவனுக்கு ஜென்மத்தில் சனி' என்று சொல்வார்கள்.

யாருக்கும் வாக்குறுதிகள் கொடுத்தால் அதை கடைசி நேரத்தில்தான் காப்பாற்ற இயலும்.

நண்பர் யார், பகைவர் யார் என்பதை இனம் கண்டு கொள்வீர்கள்.

காலம் காலமாக முடிவுக்கு வராத காரியங்கள் இப்பொழுது திடீரென்று நல்ல முடிவுக்கு வந்து விடும்.

### குருபெயர்ச்சிக் காலம்

23.7.2003இல் சிம்ம ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அதன் விளைவாக திருமண முயற்சி கைகூடும். பொருளாதார நிலை உயரும். பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் விலகும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் மறையும்.

எதிரிகள் எல்லையை விட்டு விலகுவர்.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

16.8.2003இல் மேஷத்தில் ராகுவும், துலாமில் கேதுவும் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் சில தொல்லைகளை சந்திப்பீர்கள். தங்கள் வாழ்க்கைத் துணையை தானே தேர்ந்தெடுத்த பிள்ளைகளை தட்டிக்கொடுத்து ஒத்துப்போவதே நல்லது என்று முடிவு எடுப்பீர்கள்.

பாசம் காட்டும் உறவினர்கள் ஒரு சில சமயம் பகை காட்டுவர். ராகு பலத்தால் பொருளாதார முன்னேற்றம் நன்றாக இருந்தாலும் மன அமைதி குறையும்.

### பெண்களுக்கு

இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு மிகுந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தும். குடும்ப பிரச்சினைகள் தீரும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

கணவனுக்கு தெரியாமலேயே நீங்கள் சேமித்து வைத்த தொகை பெரிய அளவில் வளர்ச்சியடைந்து ஒரு நல்ல செலவிற்கு கை கொடுக்கும். இது வரை ஆடைகளை மட்டுமே வாங்கிய நீங்கள் இனி ஆபரணங்களையும் வாங்கிச் சேர்க்க பொருள் வரவு கூடும். தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

### வக்ர காலங்களிலும் வளம் சேர்க்கும் காலங்கள்

குரு வக்ரமும், சனி வக்ரமும், செவ்வாய் வக்ரமும் உங்களுக்கு நற்பலன்களை வழங்கும்.

அக்கா லத்தில் எடுத்த காரியத்தை எளிதில் முடித்து விடுவீர்கள். இழந்த தொகையை மீண்டும் பெறுவீர்கள்.

சனியின் வக்ரகாலத்தில் செய்யும் முயற்சி வெற்றி தரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

### ஜனவரி

சுறுசுறுப்போடு செயல்படுவீர்கள் முக்கியப் பணிகளை செய்து முடிப்பீர்கள். சென்ற ஆண்டு ஏற்பட்ட அலைச்சலுக்கு, இவ்வாண்டின் தொடக்கத்திலேயே முற்றுப் புள்ளி வைக்கும் சூழ்நிலை உண்டு. குடும்ப ஒற்றுமை குதூகலம் தரும்.

எதிர்ப்புகளும் போட்டிகளும் அகலும். உடன் பிறந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். அடுத்தவர்களிடம் கொடுத்த வாக்கை காப்பாற்றி விடுவீர்கள்.

### பெப்ரவரி

வீடுகட்டும் பணி போன்ற சுப காரியங்கள் நடைபெற வழியுண்டாகும்.

வியாழன் வக்ரம் என்பதால் விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய மாதமாகும். பொருளாதார விருத்தியுண்டு உடல் நலச் சீர்கேடுகள் உருவாகலாம். ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றத்திற்காக பிற இனத்தாரின் ஒத்துழைப்பு உண்டு. உதவிக்கரம் நீட்டுவதாகச் சொல்லிய உறவினர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். திடீர் இடமாற்றம் ஏற்படலாம்.

### மார்ச்

உங்கள் கௌரவமும், புகழும் கூடும். வருமானம் பல வழிகளிலும் வந்து சேரும். உத்யோகத்தில் ஒரு சிலருக்கு ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். உங்கள் திறமைக்கு பாராட்டும், பரிசும் வந்து சேரும்.

குடும்பத்தில் ஒற்றுமை கூடும். தொழிலுக்காக எடுத்த முயற்சி கைகூடும். ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டு,

### ஏப்ரல்

தொழில் முன்னேற்றம் உண்டு. தொட்ட காரியம் வெற்றிபெறும்.

பூர்வீகச் சொத்துகளின்மூலம் பொருள் வரவு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். அதனால் அடிக்கடி உடலில் சோர்வு ஏற்படும். இடம், பூமி விற்பனை ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. வெளிநாட்டுத் தொடர்புடைய தொழில்கள் அதிக லாபத்தை தரும். தொலைதூரப் பயணங்கள் கூட ஏற்பட வாய்ப்பு உண்டு. உடன் பணிபுரிபவர்களால் ஒரு சில சிக்கல்களை சந்திக்க நேரிடலாம்.

### மே

மேலும் பணம் தாராளமாக உங்கள் கரங்களில் புரளும். பழைய கடன்கள் அடைபடும். உடல் நிலையைப் பொறுத்த வரை மருத்துவச் செலவு கூடும்.

புதிய தொழில்களுக்கு அடித்தளம் போடுவீர்கள். வியாபாரம் விருத்தியாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உன்னத நிலையை அடைவர். வாங்கல் கொடுக்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தில் உறவினர் வருகை கூடும் வீடு, மனை வாங்கும் அமைப்புகள் உருவாகலாம்.

மிதுனச் சனியால் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தியாகும். போட்டி, பந்தயங்களில் பரிசுகள் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு.

### ஜூன்

சந்தோஷம் கூடும். உங்கள் ஆசைகளும், கனவுகளும் ஒவ்வொன்றாக நிறை வேறும். திடீர் தன வரவுகளால் சில திருப்பங்கள் ஏற்படும். ஆரோக்கியம் நல்ல நிலையில் அமையும். தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். குடும்பத்தில் திருமணமாக வேண்டியவர்களுக்கு வரன்கள் வந்து வந்து வாயிற் கதவைத் தட்டும். மாதத்தின் முற்பாதியில் விழிப்புணர்ச்சியுடன்செயல்படவேண்டும்.

### ஜூலை

உடல் நலம் சீராகும். தொழில் அபிவிருத்தி அடையும். திறமையான ஆள்களின் வருகையால் திறம்பட லாபம் காண்பீர்கள். வாய் நிதானம் தேவை.

குடும்பத்தில் பெற்றோர்களின் பாசம் கூடும். விரயங்களைத் தவிர்க்க பணத்தைப் பொருளாக மாற்றி வைப்பது நல்லது. சிம்மக் குருவால் அரசு அனுகூலம் உண்டு. நண்பர்கள் நாடி வந்து உதவி செய்வர்.

### ஓகஸ்ட்

இம்மாதம் முழுவதுமே நீங்கள் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. காது, பல், வயிற்றில் வலி ஏற்பட்டு நீங்கும்.

குடும்பத்தில் தாமதப்பட்டு வந்த காரியங்கள் செயலுக்கு வரும் காலம் தொடங்கி விட்டது.

தொழிலில் லாபம் கூடும். குருபலத்தால் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பெரிய மனிதர்களின் உதவியால் பெரும் மாற்றங்களைச் செய்ய முயற்சிப்பீர்கள். கடன் தொல்லை அகல, கடினமாக உழைக்கும் சூழ்நிலை உண்டு.

### செப்ரெம்பர்

பொருள் வரவைக் கூட்டும் மாதமாகவே இம்மாதம் உங்களுக்கு அமையும். உடல் நலம் சிறிது மருத்துவச் செலவை ஏற்படுத்தும், செப்ரெம்பர் 17இற்கு மேல் உங்களுக்கு ஏற்பட்ட சோர்வு நிலைகள் மாறித் துடிப்போடு செயல்படும் நிலை உருவாகும்.

வாகன யோகம் வந்து சேரும். தொழிலுக்காக எடுக்கும் புது முயற்சிகள் வெற்றி தரும். பொன் நகைகள் வந்து சேர வாய்ப்புண்டு. பெண்வழிப் பிரச்சினைகள் ஏற்படலாம். கவனம் தேவை. பிள்ளைகள் வழியில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம்.

### ஒக்ரோபர்

ஏழரைச் சனி நடந்தாலும் எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நிறைவேறும்.

கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். பிள்ளைகள் வழியில் ஒரு நல்ல செய்தி வந்து சேரும்.

மூடிக்கிடந்த தொழிலை முயற்சி எடுத்து நடத்த முன்வருவீர்கள். பொது வாழ்வில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் செல்வாக்கு குறையாது. யாருக்கும் பணப் பொறுப்புகள் சொல்வதை தவிர்ப்பது நல்லது.

### நவம்பர்

வக்ர சனியின் இயக்கத்தால் சில சிக்கல்களும் சிரமங்களும் உருவாகலாம். பெற்றோர் வழியில் கவலை அதிகரிக்கும்.

17ஆம் திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சூரியனின் பலத்தால் எதிர்பாராத தனலாபம் வந்து சேரும், செல்வுகள் இரு மடங்காகும். வாகன மாற்றம் செய்யும் முயற்சி கை கூடும். குருவின் பார்வை பலத்தால் திருமண பேச்சுகள் கை கூடும். கட்டடப் பணியை தொடரும் பொழுது கவனம் தேவை.

### டிசெம்பர்

தொழில் முன்னேற்றம் ஏற்படும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு கிட்டும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். வாகன யோகம் கிட்டும். வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்து வசதி வாய்ப்புகளை பெருக்கி கொள்வீர்கள். மாதத்தின் பிற்பாதியில் மாபெரும் மாற்றங்களை காண்பீர்கள். கடல் பயணவாய்ப்பு கள் கை கூடும்.

(மிகுதி நாளை)

---

### சமாதானத்தைக் குழப்ப முயலும்

# தமிழ்க் குழுக்களினால் தவறாக வழிநடத்தப்படுகிறார் யாழ்.மேயர்!

## இந்து விவகார அமைச்சு கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன.17

சமாதானத்தைக் குழப்பும் தமிழ்க குழுக்களினால் தவறாக வழிநடத்தப்படுகிறார் யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன்.

- இவ்வாறு தெரிவிக்கும் காரசாரமான அறிக்கை ஒன்றை இந்து விவகார அமைச்சு விடுத்திருக்கிறது.

யாழ்.மாநகர சபையின் நிர்வாகத்தை அமைச்சர் மகேஸ்வரன் உதாசீனம் செய்கிறார் என்று கூறி யாழ். மேயர் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பாக இந்து விவகார அமைச்சின் ஊடகச் செயலாளர் விடுத்திருக்கும் அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவமும் கடற்படையும் கடலோரக் கிராமங்களில் இருந்த மக்களை வெளியேற்றி வீடுகளையும் பொது கட்டடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு குடியேறி இருந்தமையினால் அக்கிராமங்களில் பாரிய சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டு மக்கள் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முடியாதபடி இருந்தனர். இந்த அவலநிலையைச் சீர்செய்வதற்காக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் தொடர்ச்சியான பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கொழும்பு மாநகர முதல்வர் பிரசன்ன குணவர்த்தன அவர்களுடன் கலந்துரையாடி, கொழும்பு மாநகர சபையின் நிபுணர்கள் குழுவொன்றை கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் அசாத் சாலி தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றார். அக்குழுவில் வீடமைப்பு, பொது வசதிகள், நீர்விநியோகம், வடிகாலமைப்பு, சுகாதாரம் முதலிய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களும் பொறியியலாளர்களும் பிரதி மேயர் தலைமையில் கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்று பாஷையூர் குருநகர், கொழும்புத்துறை, ஆரியகுளம், தேவகுளம் முதலான பல இடங்களுக்கும் சென்று, அங்குள்ள சுகாதாரச் சீர்கேடுகளை நேரடியாக பார்வையிட்டு அமைச்சருக்கு இது பற்றி எடுத்துரைத்தார்கள். விரைவில் அவர்களுடைய பூரண அறிக்கை கிடைத்ததும், மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் முடிவுசெய்துள்ளார்.

இக்கிராமங்களுக்கு அமைச்சரும குழுவினரும் சென்றபொழுது அங்குள்ள மக்கள் பெருமளவில் திரண்டு வரவேற்றதுடன் தங்களது குறைகளை நேரடியாகத் தெரிவித்தனர். இவ்வாறு தங்கள் குறைகளைக் கேட்டறிவதற்காக இதுவரை யாரும் முன்வந்ததில்லை என்று தெரிவித்தார்கள். மக்களுடன் நேரடியாக கொழும்பு மாநகர பிரதி மேயர் உரையாடிய பொழுது பல வேலைத்திட்டங்களை தாங்கள் சிரமதானம்மூலம் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் தமக்கு வழிகாட்டுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துதருமாறும் விண்ணப்பித்துக்கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்டு இன்றைய அரசில் ஒரேயோர் இலங்கைத் தமிழ்மக்களின் அமைச்சராக இருப்பவர் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர். மக்களின் அவல நிலைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பும் கடமையும் அவருக்குண்டு என்பதை அனைவரும் அறிவர். இத்தகைய கடமைகளை நிறை வேற்றுவதற்கு அமைச்சர், எவரது அங்கீகாரத்தையும் பெறவேண்டிய அவசியம் கிடையாது. நிலைமை இவ்வாறிருக்க, யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரும் வேறு, சிலரும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தமது கடமைகளில் குறுக்கிடுவதாக பத்திரிகைகளுக்கு தெரிவித்திருப்பது அவர்களது அறியாமையை வெளிப்படுத்துகிறது. சமாதானத்தைக் குழப்பும் தமிழ் குழுக்களினால் வழிநடத்தப்படும் மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையன் சிக்கித்தவிப்பது கவலைக்குரிய விடயமாகும். இம்மாநகர சபை முதல்வருக்கு துணிவிருந்தால் இக்குழுவுடன் மக்களிடம் சென்று அவர்களது குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க முடியுமா?

யாழ்ப்பாணம் மாநகர சபை நகரின் தேவைகளை நிறைவேற்ற முடியாத ஒரு மாநகர சபையாக உள்ளது. அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கே சம்பளம் வழங்கமுடியாத நிதி நெருக்கடியில் உள்ள மாநகர சபை, தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவர் அமைச்சராகவிருந்து மக்களுக்குப் பணியாற்ற முன்வருவதைக் குறைகூறுவது எத்தகைய அறிவீனமான செயல். இராணுவம் யாழ்மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த பொழுது அதனைத் தட்டிக்கேட்பதற்கு இந்த மாநகர சபைக்கு திராணியிருக்கவில்லை. அவர்கள் வெளியேறியபொழுது குடியிருப்புக்களும் நீர் வடிகால்களும் கழிவு நீர் தேங்கி மிகத் துர்நாற்றத்துடன் காணப்பட்டதையும் அவர்கள் பாராமுகமாக இருந்தார்கள். அதனால், தொற்றுநோய்கள் ஏற்பட்டு, மக்கள் உயிர்களைக் கூட பலிகொடுத்ததை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இத்தகைய மாநகர சபையினர் மக்கள் சேவைக்காகச் செயற்படும் ஓர் அமைச்சருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவது வெறுங் கேலிக்கூத்தாகும். தமிழ் மக்களின் நன்மைகருதி மாநகர சபையினர் இத்தகைய கேலிக்கூத்து போராட்டங்களை நிறுத்தி இனிமேலாவது உருப்படியான செயல்களைச் செய்ய முன்வரவேண்டும்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரின் நடவடிக்கைகளை யாழ்.மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தச்சுவேலை மெஷின்கள், 10" 12", 14" எலக்றிட்கல் றில்லர்கள், ஜெனரேற்றர்கள், வெல்டிங் பிளாண்ட் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுதாகரன் இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (13283)

டாக்டரின் பாவனையில் நல்ல நிலையிலுள்ள LML Select Scooter, CD 100 Deluxe Hero Honda, Lumala Gents சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. இன்று (17.01.2003) மாலை தொடர்புகொள்ளலாம். 123, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (13268)

போட்டோஸ்ரட் இயந்திரம் SHARP - SF 1118, மிகவும் நல்ல நிலையிலுள்ள ஜெனரேட்ரா றொபின் 3KV என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு வை.சிவகுமார், இல.461, நாவலர் வீதி, அத்தியடிச்சந்தி, யாழ்ப்பாணம். (13312)

## கோழிமுட்டை விற்பனை

தரமான சிவப்புக் கோழி முட்டைகள் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (13297)

## விற்பனையாகின்றது

இலகுவாக, இலக்கணத்தைக் கற்றிட வழிகாட்டும் இலகு தமிழ் இலக்கண வினா-விடை தரம் 6-11 வரையான மாணவர்களுக்காகப் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவாகத் தொகுத்து எழுதப்பட்ட நூல். ஆசிரியர்: அ.விஜிதா. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (13289)

## ஆங்கில வகுப்புகள்

O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கில விசேட வகுப்புகள். சிறுசிறு குழுக்களாக அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: நாகேந்திரம், 34/4 (புதியது 82/24), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (13098)

## பணியாள் தேவை

வீட்டில் இருந்து 65 வயது மூதாட்டியைப் பராமரிப்பதற்கு 50வயதிற்குட்பட்ட பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: M.கேதீஸ்வரி, உரும்பிராய் தெற்கு, வேம்பன் வீதி, உரும்பிராய். (13230)

## கணனி தட்டெழுத்து

Computer Typing வகுப்புகள் தமிழ், ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படுகிறது (இரவு 8.30 மணி வரை). தொடர்பு: இல.37 (149), சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (13290)

## தவறிவிட்டது

கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த முத்துவேலு சுந்தரமூர்த்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.502895214V), விசேட அடையாள அட்டை (இல. 090900195), இலங்கை மின்சாரசபை அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன 12.01.2003 ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரக் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (13229)

மாவெள்ளை நிறமும், நெற்றியில் வெள்ளை மறையும் உடையதான பால்கறக்கும் பசுவும் அதனுடன் கன்றுக்குட்டியும 13ஆம் திகதி திங்கட்கிழமை முதல் காணவில்லை. கண்டவர்கள் இல.59, சிவன் புது வீதி, நல்லூர் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (13304)

சுன்னாகத்தை சேர்ந்த க.இராசகுலரத்தினம் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.602591573V), விசேட அடையாள அட்டை, சிமெந்து கூட்டுத்தாபன அடையாள அட்டை என்பன சந்நிதி ஆலய சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கன்னாதிட்டிச் சந்தியிலுள்ள சிமெந்து கூட்டுத்தாபன அலுவலகத்தில் ஒப்படைத்துதுவவும். (13298)

**K.T.C.**
ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.

**CHEMISTRY**
Model Paper with Revision
*By:*
**A.Shivakumar**
*(I.Chem.C)*
**ஆரம்பம்: சனி 18.01.2003**
**காலை 8.00**
(13315)

## புதிய வகுப்புகள்

**தையல், சிகையலங்காரம், ஐசிங் போன்ற பலபயிற்சி வகுப்புகள் 19.01.2003 அன்று ஆரம்பமாகவுள்ளதால் முற்கூட்டியே பயிற்சிகளைப் பெறவிரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-**

**சிறி சாயி நிறுவனம்**
**மானிப்பாய் வீதி,**
**உரும்பிராய்ச்சந்தி.**
(13310)

## வடமராட்சி கிழக்கில் அபிவிருத்திக்கென கிராமங்கள் தெரிவு

வடமராட்சி கிழக்கு,ஜன.17

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வடமராட்சி கிழக்கில் 5 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. முள்ளியான், வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன். ஆகிய கிராமங்களே இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களாகும்.

யுத்தத்தினால் முற்றாக அழிந்துள்ள மேற்படி கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பொது வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

(எ-182)

## மருதங்கேணியில் மீளக் குடியமர்ந்தோருக்கு ரூ.15 ஆயிரம் கொடுப்பனவு

வடமராட்சி கிழக்கு,ஜன.17

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மேலும் 550 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வு உதவிக் கொடுப்பனவான ரூ.15 ஆயிரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உதவு தொகையைப் பெறவுள்ள குடும்பங்களின் பெயர்ப் பட்டியல்கள் அப்பகுதி கிராம அலுவலர் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

மேற்குப் பிரதேசத்தில் ஏற்கனவே 266 குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. (எ-182)

## அகவொளி நடத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.17

அகவொளி குடும்பவளத்துணை நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள நிலைய அலுவலகத்தில் இடம் பெறும்.

இதில் வன்முறையற்ற தொடர்பாடல் என்ற தொனிப் பொருளில் அருட்திரு.எஸ்.டேமியன் (அ.ம.தி) கருத்துரை வழங்குவார். (ஒ)

## இசைப்பேழை வெளியீடு

இணுவில்,ஜன.17

கோண்டாவில் வடக்குஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் வெளியிடும 'இசைப் பேழை - பாகம்2' வெளியீட்டு விழா நாளை காலை 10மணிக்கு ஆலய முன்றிலில் விழாக் குழுத்தலைவர் யோ.விஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஒ-ரி)

# அந்தியேட்டி அழைப்பு



அமரர்

## சிவகுரு சிவபாலசிங்கம்

*(முன்னாள் இ.த.ஆ. சங்க யாழ். மாவட்ட செயலாளர்)*

தாயின் மடியில் 02.07.1927 — ஆண்டவன் பாதத்தில் 04.01.2003

**04.01.2003 அன்று எமது குடும்ப ஒளிவிளக்கு மறைந்தபோது ஆதரவு தந்து பல உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றி என்றும் உரியது. அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் நடைபெறும் நிகழ்வில் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*"அறிவகம்"*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (13296)

**மனைவி, பிள்ளைகள்.**

---

EXPO — LION AIR

**யாழ். ~ கொழும்பு ~ யாழ்.**
**விமானப்பயணச் சீட்டுக்களுக்கும்**
**சர்வதேச விமானப்பயணச் சீட்டுக்களுக்கும்**
**ஆலோசனைகளுக்கும்**
*பஸ் நிலையத்திற்கு மிக அண்மையில்*
**சிறி இராமகிருஸ்ணா**
*இல.9, நவீன சந்தை,*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* ☎ 021 - 222 2067
(13299)

## மணிக்குரல் விளம்பரசேவை அறிவித்தல்

**வர்த்தகப் பெருமக்களே! 2003இற்கான நவீன சந்தை விளம்பர சேவை எமக்குக் கிடைக்கப்பெறவில்லை. தற்போது நடைபெறும் சேவைக்கும் எமது மணிக்குரல் விளம்பர சேவைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மீண்டும் பண்டிகைக்கால வாகன விளம்பரமாக எமது சேவை நடைபெறும். அத்துடன், மணி ஜெயா 8ஆம் ஆண்டு ஞாபகார்த்த கலைப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ளதால் வழமைபோல் பாட்டுக்குப்பாட்டு, தேன் இசை மழை நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலரும் கடிதம்மூலம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:**

**மணி வீடியோ**
52, மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
**விண்ணப்ப முடிவு திகதி:**
**31-01-2003**
(13306)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27 - 07 - 1924 — மறைவு 17 - 12 - 2002

### திருமதி சிவராசா மகேஸ்வரி

*ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு*
*"அம்மா" என அழைக்க நீங்கள்*
*இல்லையே அம்மா! உங்கள்*
*உடல் எம்மைவிட்டுச் சென்றாலும்*
*உயிர் எங்களை விட்டு அகலாது.*
*எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தங்கள் நினைவுடன்:
அன்புப் பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*பலாலி றோட்,*
*திருநெல்வேலி.* (13305)

## 8ஆம் ஆண்டு கண்ணீர் நினைவலைகள்



மண்ணகம் 05 - 04 - 1926 — இறையகம் 15 - 01 - 1995

### அமரர் ஏரம்பு சோதிலிங்கம்

*(மண்டைதீவு)*

**திதி 17.01.2003**

*அன்பின் சிகரமாய் பாசத்தின் உருவமாய்*
*குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து வழிகாட்டி*
*பார் போற்றும் உத்தமராய் நியாயத்தின் இருப்பிடமாய்*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்திடம்*
*சென்றதேனோ? பிரிந்து ஏன் நான் காண்பதென்ன*
*ஈரேழு யுகமாயினும் ஆறிடுமோ எங்கள் துயர்*
*இறைக்குதவர் இறையானவிட்ட தங்களை என்றென்றும்*
*போற்றிச் துதித்து நிற்கின்றோம்.*

ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!

*என்றும் தங்கள் பிரிவால் துயருறும்:*
அருமை மனைவி, பாசமிகு மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்.

*நம்பர் 411/2,*
*காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (13311)

# இந்துக்களிடையில் புத்தெழுச்சியை ஏற்படுத்தப்போகும் 'இந்து மாநாடு'

**இந்துசமய விவகார அமைச்சினால் இந்த ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை கொழும்பில் நடத்தப்படவுள்ள 2ஆம் உலக இந்து மாநாடு பற்றி மாநாட்டுச் செயலாளர் பேராசிரியர் சி.பத்மநாதன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.**

இந்துசமய விவகார அமைச்சு ஏற்பாடு செய்கின்ற இரண்டாவது உலக இந்துமாநாடு எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிமுதல் 5ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டிற்கென அமைக்கப்பட்டுள்ள செயலகம், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் கட்டடத்தில் மாநாட்டுச் செயலாளர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையின்கீழ் இயங்கிவருகின்றது. மாநாடு தொடர்பான பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்துவதற்கென வழிகாட்டற்குழு, கல்விசார்குழு, நிதிக்குழு, ஒருங்கமைப்புக்குழு, போக்குவரத்துக்குழு, பிரசாரக்குழு, மலர்க்குழு, வரவேற்புக்குழு, வெளிவாரி உறவுக்குழு ஆகிய பதினொரு குழுக்கள் இயங்குகின்றன.

மாநாட்டின் ஓரம்சமாக, பாடசாலைகளில் பயிலும், இந்து மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சு, பண்ணிசை ஆகியபோட்டிகள் கீழ், மத்தி, மேல் ஆகிய மூன்று பிரிவுகளில் நடைபெற்றுள்ளன. இவை மாவட்ட ரீதியிலும், தேசிய மட்டத்திலும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதுவரை இப்போட்டிகளில் பங்குகொள்ள ஆர்வம் தெரிவித்துள்ள மாணவர்களின் பெருந்தொகையான விண்ணப்பங்கள் மாநாட்டுச் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மாநாட்டு நிகழ்வுகளில் ஒன்றாக இடம்பெறவுள்ள மாணவர் அரங்கில் இளைய தலைமுறையினர் கலந்துகொண்டு இந்துசமயம், கலாசாரம் தொடர்பான பல் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். இவ்வரங்கிற்கு பார்வையாளர்களாக பல்கலைக்கழகங்கள், கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் என்பவற்றில் பயிலும் மாணவர்களும் தம்மைப் பதிவுசெய்துகொண்டுள்ளனர்.

மாநாட்டுத் தினங்களில் இடம்பெறவுள்ள கண்காட்சி, இந்துசமயம், கலாசாரம் என்பவற்றைப் பிரதிபலிக்கத்தக்க சின்னங்கள், சிலைகள், பூசை உபகரணங்கள், மங்கலப் பொருள்கள், ஆவணங்கள், சுவடிகள், நூல்கள் போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாக மிகவும் விசாலமான கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இதற்கென தமிழகத்தைச் சேர்ந்த கலைக்கூடங்கள், இலங்கையின் கலைக்கூடங்கள் என்பவை முன்வந்துள்ளன.

மாநாட்டினையொட்டி வெளியிடப்படவுள்ள சிறப்புமலர் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. தற்போது தமிழக, இலங்கை ஆய்வாளர்களின் கட்டுரைகள் வந்து சேர்ந்தவண்ணம் உள்ளன.

அதுபோன்றே மாநாட்டின் அமர்வுகளில் ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வாசிக்கப்படவுள்ளன. உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 'இந்துசமய' அறிஞர்கள், விற்பன்னர்கள் நேரிற் கலந்துகொண்டு இக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். இக்கட்டுரைகள் இந்து சமயத்தின் பல்வேறு பரிமாணங்களையும் விளக்குவனவாகவும் நவீன காலத்தில் சமய வளர்ச்சி பற்றி நோக்குவதாகவும் அமையவுள்ளன.

மாநாடு தொடர்பாக தமிழகத்திலிருந்து கிடைத்துவரும் ஆதரவு மிகவும் உற்சாகம் தருவதாகவுள்ளது. ஆதீன முதல்வர்களும், சமய அமைப்புக்களின் உறுப்பினர்களும் நேரில் வருகைதருவதற்கு ஒப்புதல் அளித்துள்ளனர். திருவாவடு ஆதீன முதல்வர் மாநாட்டிற்குத் தமது ஆசிச செய்தியையும் அருளுரையையும் அனுப்பிவைத்துள்ளார்.

தமிழகத்தையும், வெளிநாடுகளையும் சேர்ந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட பேராளர்கள் மாநாட்டிற் பங்குகொள்வதற்கென தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். தலைசிறந்த கல்விமான்கள், சமயச் சொற்பொழிவாளர்கள், கலைஞர்கள் எனப் பல திறத்தினரும் பேராளர்களாகக் கலந்துகொள்ள வருகைதருகின்றனர்.

மாநாடு பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த இந்துசமய அமைப்புக்கள், ஆலய நிர்வாக சபைகள், அறநெறிப் பாடசாலைகள் என்பன தமது பூரண ஆதரவினைத் தெரிவித்துள்ளன. பல்கலைக்கழக அறிஞர்கள் சமயப் பெரியோர் என்போர் அடிக்கடி மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செயவதோடு, கடிதமூலமும் தொடர்புகொண்டவண்ணம் உள்ளனர்.

இலங்கை இராமகிருஷ்ணமிஷன், அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை, இலங்கை இந்துப் பேரவை, கொழும்பு இந்து மகளிர் மன்றம், விஷ்வ ஹிந்து பரிஷத், சனாதன தர்ம யுவவிழிப்புணர்ச்சிக்கழகம் முதலான அமைப்புகள், மாநாட்டுச் செயலகத்துடன் நெருக்கமான தொடர்புகளைக்கொண்டு இயங்குகின்றன. அத்துடன், இந்த அமைப்புகளைச் சார்ந்த பெரியோர், அங்கத்தினர் என்போரும் மிகவும் பிரதான பல பொறுப்புகளை ஏற்று மாநாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பிலுள்ள வர்த்தக சமூகத்தினரும், புரவலர்களும், மாநாட்டு நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்ச்சிகள் என்பவற்றில் ஏற்படும் செலவினங்களைப் பொறுப்பேற்றுக்கொள்ளவதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளதோடு, மாநாட்டு ஒழுங்குகளின் முன்னேற்றத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர்.

மாநாட்டை ஒட்டிய காலப்பகுதியில் பிராந்திய ரீதியாகவும் நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி ஆகிய நகரங்களில் கருத்தரங்குகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடற் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது. அதேபோல், கடந்த 9ஆம் திகதி வவுனியாவிலும், 11ஆம் திகதி திருகோணமலையிலும் அங்கு நடைபெறவேண்டிய நிகழ்ச்சிகள் பற்றி அரச அதிகாரிகள், சமயப் பிரமுகர்களோடு ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், மேலதிகச் செயலாளர் க.பரமலிங்கம், மாநாட்டுச் செயலாளர் பேராசிரியர் சி.பத்மநாதன் ஆகியோர் நேரிற் கலந்துகொண்டு மாநாட்டு ஏற்பாடுகள் பற்றி விளக்கமளித்து வருகின்றனர். இதேபோன்றதொரு கலந்துரையாடற் கூட்டம் ஒன்றை மலையகத் தலைநகரமான கண்டியிலும் நடத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த மாவட்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக அவ்வப்பிரதேச முக்கியஸ்தர்கள் அடங்கிய பிரதிநிதிக்குழுக்களும் அமைக்கப்படவுள்ளன.

இச்செயற்பாடுகளின் எதிரொலியாக, இலங்கைவாழ் இந்துமக்களிடையே புத்தெழுச்சி ஏற்படும் என்பது இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் நம்பிக்கையாகும்.

2ஆம் உலக இந்து மாநாடு பற்றிய இணையத்தளமுகவரி:-

**www.worldhinduconf.2003.org** என்பதாகும். அவ்வாறே **info@world-hindu.conf.2003.org** மின்னஞ்சல் முகவரியுடனும் மாநாட்டுச் செயலகத்துடன் தொடர்புகொள்ளலாம். (எ)

# புத்தளத்தில் இதுவரை டெங்குக்கு 9 பேர் பலி!

கொழும்பு,ஜன.17

புத்தளம் மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் டெங்குக் காய்ச்சல் காரணமாக இதுவரை 9 பேர் இறந்துள்ளனர்.

இந்த நோய்க்கு இலக்காகிய பலர் புத்தளம் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இங்கு டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஒ)



*காரைநகர் மணிவாசகர் சபையின் 48ஆவது மணிவாசகர் விழா அண்மையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றபோது மேற்படி சபையினால் நடத்தப்பட்ட சமயபாடப் பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்ற கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய மாணவி செல்வி வேலுப்பிள்ளை தேவகுமாரிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிரேஷ்ட அறிவிப்பாளர் திருமதி வசந்தா வைத்தியநாதன் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிப்பதைப் படத்திற்காணலாம்.*

*(எ-73)*

# மனதை நெகிழவைத்த குடாநாட்டு விருந்தோம்பல்

**சமாதானச் சூழ்நிலையில் ஏராளமான தென்னிலங்கை வாசிகள் வட பகுதிக்கு சுற்றுலா வந்து செல்கின்றனர். அவர்களில் குடாநாட்டுக்கு முதன்முறையாக வந்து சென்ற ஆசிரியையான திருமதி பெரேரா என்பவர் தனது பயண அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பியிருந்தார். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

புரிந்துணர்வு உடன்படிக்கை கைசாத்தாகி சமாதானப் பேச்சு ஆரம்பமானது முதல் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல நான் பெரும் ஆவலுடன் இருந்தேன். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றது. நான் சிறுபிள்ளையாய் இருந்த போது, எனது பாட்டி தான் யாழ்ப்பாணம் சென்று வந்தது பற்றி அழகான கதைகளைச் சொல்லியது இன்றும் ஞாபகமிருக்கிறது. அப்போது அதைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு எப்போது நான் யாழ்.செல்வேன் என்று ஏங்கினேன். அந்த இனிய நாள் பற்றி கனவு கண்டுகொண்டிருந்தேன்.

அந்தக் காலத்தில் இலங்கை ஓர் அமைதியான தீவாக இருந்தது. யாழ். மக்கள் என்றும் சிரித்த முகங்களுடன் சிறந்த விருந்தோம்பும் பண்புடன் தங்களை அனுசரித்தார்கள் என்று பாட்டி கூறிய இனிய நிகழ்வுகள் என் மனதில் ஆழப் பதிந்திருந்தன.

ஆனாலும், எனது கனவுகள் நிறைவு பெற நீண்டகாலம் எடுத்தது. அந்த நீண்ட காலத்திற்குள் நான் திருமணமாகி, மூன்று பிள்ளைகளுக்கும் தாயாகிவிட்டேன் பிள்ளைகளும் வளர்ந்தவர்களாகிவிட்டனர். இந்த நீண்டகால இடைவெளிக்குள் எவ்வளவோ மாற்றங்கள் இடம்பெற்றுவிட்டன.

எதிர்பாராது ஒரு நாள்; எனது மகள் முகத்தில் புன்முறுவல். ஓடி வந்து, என்னிடம் கூறினாள்; அதாவது எனக்குத் தெரிந்த சிலர் யாழ்ப்பாணத்திற்குச் சுற்றுலாப் பயணம் செல்லவுள்ளனர்; நாங்களும் அவர்களுடன் இணைந்துகொள்ளலாம் என்று அவள் கூறினாள். எனக்கு ஒரே மகிழ்ச்சி.

அதன்படி 2002.09.03ஆம் திகதியன்று, இரவு 10.30 மணியளவில் யாழ். செல்வதற்கு ஒழுங்குசெய்யப்பட்ட பஸ்ஸில் மற்றவர்களுடன் நானும் எனது பிள்ளைகளும் புறப்பட்டோம்.

நாங்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று தங்கவுள்ள வீட்டுக்காரரும் எம்முடன் வந்தார். முன்பின் கண்டிராத அந்த தமிழ் அன்பர் எங்களுடன் நல்ல அன்புடன் பழகினார். அவரது சிறந்த வரவேற்பு என்னை மிகவும் கவர்ந்தது. தெய்வாதீனமாக நாங்கள் அனைவரும் ஆங்கில மொழி பேசக்கூடியவர்களாக இருந்தோம். மொழி எமக்கு இடையில் பிரிவை ஏற்படுத்தவில்லை. அவருடன் உரையாடிய போது எனது கிராமப் பகுதி நண்பர் ஒருவர் அவருக்கும் நன்கு அறிமுக மானவர் எனத் தெரியவந்தது.

புறப்பட்ட எங்கள் பஸ், மறுநாள் காலை 5.30 மணிக்கு வவுனியாவை அடைந்தது. இனிய பகல்பொழுது மலர்ந்துகொண்டிருந்தது. ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்தில் சற்றுத் தாமதமாகினோம். அதன் பின்னர் ஏ-9 பாதையில் தடையெதுவும் இன்றி பிரயாணம் தொடர்ந்தது. பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் நாங்கள் தங்கவேண்டிய அந்த வீட்டைச் சென்றடைந்தோம். அந்த தமிழ் அன்பரின் குடும்பத்தினர் தமது இரு கரங்களையும் நீட்டி உண்மையான மனமகிழ்ச்சியை முகத்தில் காட்டியவண்ணம் எங்களை வரவேற்றனர். அந்தச் சந்தர்ப்பத்தை ஒரு போதும் என்னால் மறக்கவே முடியாது. ஆனால், அங்கு இரு பகுதியினருக்கும் மொழி ஒரு பிரச்சினையாக இருந்தது. எனினும், அது ஒரு தடையாக எங்களுக்கிடையில் இருக்கவில்லை. சைகைகள்மூலம் நாம் சமாளித்தோம். அப்போது உவகை மேலீட்டில் எழுந்த சைகைப் பேச்சுக்கள் எங்களைப் பல தடவைகள் சிரிக்க வைத்தன. வரவேற்பும் அனுசரிப்பும் அபாரமாக இருந்தன.

பின்னர், நாங்கள் நயினாதீவிற்கு ஒரு பயணம் மேற்கொண்டோம். அது எனது சிறுபிள்ளைப் பராயத்துக்

## தமிழில்:

கனவை நனவாக்கியது. இந்தப் பயணத்தில் அரை மணிநேரம் படகில் பயணம் செய்யவேண்டி இருந்தது. அது அச்சம் தரும் உணர்வாக இருந்தது. ஆயினும், அந்த அபூர்வமான அனுபவத்துடன் நயினாதீவுக் கரையை அடைந்தோம்.

முதலில் நயினாதீவு ஆலயத்தைக் கண்டோம். அந்த ஆலயத்தின் இடது பக்கமாக சிறு தொலைவில் நாகதீப விகாரை. அதற்கு நடந்து சென்றோம். செல்லும்போது கரையோரத்தில் சிறுவர்கள் பல ரகங்களைச் சேர்ந்த நத்தை, ஓடுகளை விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். இந்த இடங்களைப் பார்த்த பின்னர் நாங்கள் தரித்து நின்ற இடத்திற்குத் திரும்பினோம். அந்த இடத்திலும் சுறுசுறுப்பாக, இறால் வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்த வியாபாரத்தில் அவர்கள் அன்றைய தினம் எம்மால் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டிருப்பார்கள். நாங்கள் எமது பஸ் நின்ற இடத்திற்கு வந்தபோது தமிழ் அன்பரும் அவரது குடும்பத்தினரும் நன்கு எம்மை வரவேற்றனர். அவர்களின் வரவேற்பு மனதைக் கவரக்கூடியதாக இருந்தது. அங்கு அவர்கள் எமக்கு மதிய உணவு பரிமாறினார்கள். நாங்களும் அவ்விடத்தில் - கடற்கரையோரத்தில் - நிலவானின் ஒளிவிழும் கடலைப் பார்த்தவண்ணம் மதிய உணவினை உண்டு மகிழ்ந்தோம். அப்போது எனது பாட்டி முன்பு கூறிய அந்த கடற்பிரயாணம் மோட்டார் படகு நிறைய பயணிகளை ஏற்றிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடி கடலில் செல்வதைப் பற்றிக் கூறியது நினைவிற்கு வந்தது.

வேறொரு நாள் தமிழ் அன்பர் எங்களை வேறொரு கடற்கரைக்குக் கூட்டிச் சென்றார். பகல் நேரம், கடற்கரை மணல் மிகவும் சூடாக இருந்தது. நடக்கும்போது பாதங்கள் மணலில் புதையுண்டன. இருந்தாலும் அதுவும் ஒரு சுகமான பொழுதுபோக்காக இருந்தது. நாங்கள் அந்த வீட்டில் தங்கியிருந்தபோது இரு சந்தர்ப்பங்களில் தமிழ் அன்பரின் தந்தையார் வீட்டிலும் இரவு உணவு உண்டோம். அவர்களும் மிகவும் பண்பான, அன்பான முறையில் உபசரித்தனர்.

பின்னர் ஒருநாள் நல்லூர் ஆலயத்திற்குச் சென்றோம். அன்றைய தினம் அவ்வாலயத்தின் ஓர் உற்சவநாள். அங்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமாகக் காணப்பட்டனர். அங்கு நன்கு அலங்கரிக்கப்பட்ட சிறுசிறு கடைகள் இருந்தன. அச்சூழலைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தபொழுது ஆலய மணியோசை கேட்டது. அங்கு நாம் விரும்பிய சில பொருள்களை அந்த சிறு கடைகளிலிருந்து வாங்கினோம்.

பின்னர் 9ஆம் திகதி நாங்கள் அங்கிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமானோம். எங்கள் எல்லோர் மனங்களும் நெகிழ்ந்தன. எங்களை அறியாமலே கண்ணீர் சொரிந்தோம். அவர்களுக்குள் எனது நிலை சற்று வேறுபாடானது. என்னுடன் வந்த மற்றையோருக்கு அந்தத் தமிழ் அன்பர் நன்கு தெரிந்தவர். எனக்கோ அவரையோ, அவரது குடும்பத்தினரையோ முன்பின் தெரியாது. யாழ்ப்பாணச் சூழலே புதியது. அந்தப் பயணம் மிகவும் ருசிகரமானது. நன்கு அனுபவித்து மகிழ்ந்தேன் அந்த நிலையில், எனது மனம் மிகவும் நெகிழ்ந்தது. அவர்களுக்கு கைம்மாறாக என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர்களது அன்பும் பண்பும், வரவேற்பும் உபசாரமும் என்னை நெகிழவைத்தன. அவர்களின் பண்பாட்டுக்கு கைம்மாறாக, என்னால் முடிந்தது - அவர்களையும் எனது வீட்டுக்கு வருமாறு அழைத்து நன்கு உபசரித்து அவர்களையும் எமது பகுதியில் சில முக்கிய இடங்களுக்கும் கூட்டிச்சென்று காண்பிக்கவேண்டும் என்பதே. எனவே, என் பெருவிருப்பத்தை அவர்களுக்கு வலியுறுத்திக் கூறி, அவர்களிடம் இருந்து விடைபெற்றுத் திரும்பினேன். ☆

# மாணிக்கக் கற்களை விழுங்கி கடத்த முயன்றவர் கைது!

கொழும்பு,ஜன.17

சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களை வயிற்றினுள் விழுங்கி அவற்றை இந்தியாவுக்குக் கடத்த முற்பட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து விமான நிலையப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

சென்னையை நோக்கிப் புறப்படவிருந்த விமானத்திற்காகப் பயணிகள் காத்திருந்தனர். இந்தப் பயணிகள் காத்திருக்கும் பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை பொலீஸார் சோதனையிட்டனர். அப்போது அவரது வயிற்றுக்குள் பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்கள் இருப்பது அறியப்பட்டது.

இலங்கையில் இருந்து மாணிக்கக் கற்களையும் ஹெரோயின் போதைப்பொருள்களையும் இந்த நபர் இந்தியாவுக்கு கடத்திச்செல்ல முயன்றமை பொலீஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந்தது.

சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கற்களின் ஒரு பகுதி வயிற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது.

இந்தக் கடத்தல் விவகாரத்துடன் தொடர்புடைய மேலும் பலர் தேடப்பட்டு வருவதாக விமான நிலையப் பொலீஸார் தெரிவித்தனர்.. (ம)

# புலிகளின் குரல் காலை ஒலிபரப்பு நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 06.30 | ஆரம்பம் - மாவீரவணக்கம் | | | | | | |
| 06.32 - 06.40 | இதய மலர்கள் | கலையரங்கம் | அக்கராயன் பிரதேசவானொலி மன்ற நிகழ்ச்சிகள் | முள்ளியவளை பிரதேசவானொலி மன்ற நிகழ்ச்சிகள் | ஈரமுது | விசுவமடு பிரதேச வானொலி மன்ற நிகழ்ச்சிகள் | மல்லாவி பிரதேச வானொலி மன்ற நிகழ்ச்சிகள் |
| 06.40 - 06.50 | புதுக்குடியிருப்பு வானொலி மன்ற நிகழ்ச்சிகள் | | | | | | |
| 06.50 - 07.00 | | | | | | | |
| 07.00 - 07.10 | | | | | கவிதா நிகழ்வு | | |
| 07.10 - 07.20 | தாயகப் பாடல்கள் | நீங்கள் கேட்டவை | நீங்கள் கேட்டவை | நீங்கள் கேட்டவை | | பண்புகள் மலர | உணர்வலைகள் |
| 07.20 - 07.30 | | | | | | | |
| 07.30 - 07.40 | செய்திகள் - அறிவித்தல் - அவதானிப்பு போட்டி வினா விடை | | | | | | |
| 07.40 - 08.00 | தாயகப் பாடல்கள் | நீங்கள் கேட்டவை | நீங்கள் கேட்டவை | நீங்கள் கேட்டவை | நீங்கள் கேட்டவை | தாயகப் பாடல்கள் | நீங்கள் கேட்டவை |

# புலிகளின் குரல் மாலை ஒலிபரப்பு நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 07.00 | ஆரம்பம் - மாவீரவணக்கம் | | | | | | |
| 07.02 - 07.30 | மாவட்ட மன்ற நிகழ்ச்சிகள் | | | | | | |
| 07.30 - 07.40 | செய்திகள் - தகவல் இணையம் | | | | | | |
| 07.40 - 07.50 | கணப்பொழுது | அறிவியல் உலகம் | முத்தமிழ் கலையரங்கம் | விழிதிறக்கும் வேர்கள் | தாயகப் பாடல்கள் | வளநாடு | நட்சத்திரப் பூக்கள் |
| 07.50 - 08.00 | உணர்வும் பகிர்வும் | | | | | | |
| 08.00 - 08.10 | | விடுதலை முழக்கம் | வரலாறு சொல்லும் பாடம் | உன்னத பயணம் | வெள்ளிப் பொழுது | குயிலோசை | கலந்துரையாடுவோம் |
| 08.10 - 08.15 | | | நாடகம் | | | | |
| 08.15 - 08.20 | நெஞ்சம் ஆறுமா | | | | | | |
| 08.20 - 08.30 | | கருத்துக்களம் | | | | நேயர் கடிதங்கள் | கணப்பொழுது |
| 08.30 - 08.45 | செய்திகள் - அறிவித்தல் | | | | | | |
| 08.45 - 09.00 | காலநாடிகள் | தொடர் நாடகம் | அறிவியற் கதிர்கள் | தொடர்நாடகம் | தாயகப் பாடல்கள் | அகமும் புறமும் | தொடர் நாடகம் |
| 09.00 - 09.20 | மன்றத் தெரிவு | நலந்தானா | தமிழின்பம் | உள்ளம் சிந்தும் | மன்றத் தெரிவு | பாடலும் தேடலும் | மனமே மனமே |
| 09.20 - 09.30 | | | கணப்பொழுது | | | | |
| 09.30 - 09.40 | செய்திகள் | | | | | | |
| 09.40 - 09.55 | ஏர்முனை | நீங்கள் கேட்டவை | விளையாட்டுத் தகவல்கள் | நீங்கள் கேட்டவை | தாயகப் பாடல்கள் | நீங்கள் கேட்டவை | நீங்கள் கேட்டவை |
| 09.55 - 10.00 | நாளாந்த அவதானிப்பு வினாக்கள் | | | | | | |
| 10.00 | ஒலிபரப்பு நிறைவு | | | | | | |


## அறிவித்தல்

திட்டமிட்டபடி 17.01.2003, 18.01.2003 திகதிகளில் நடைபெறவிருந்த சிறுவர்களுக்கான திறன்விருத்திப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் கீழ்க் குறிப்பிட்ட திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

24.01.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு
யா/மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
25.01.2003 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு
யா/வட.இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறையில் நடைபெறும்.

இ.சத்தியலிங்கம்
சிறுவர் உரிமைகள்
மாவட்ட பயிற்சியாளர்,
கரவெட்டி.

(C/26101)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

15.01.2003இல் கட்டுடை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுழுப்பின் அதிர்ஷ்டசாலிகள் 02.02.2003 ஞாயிறு பி.ப.5மணிக்கு மேற்படி நிலையத்தில் தம் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

முதலாம் பரிசு 2191
இரண்டாம் பரிசு 2489
மூன்றாம் பரிசு 1443
*ஆறுதல் பரிசுகள்* : 2050, 0713, 0363, 1509, 0880

- நிலையத்தினர். (13313)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்
திரு.நா.கமலநாதன் அவர்களின்
பாசமிகு சகலன்

### பூபாலசிங்கம் விக்னேஸ்வரன்

அவர்கள் 2003.01.10 வெள்ளிக்கிழமை லண்டன் நகரில் இயற்கை எய்தியமையையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

*யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.* (13324)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி ஆறுமுகம் தங்கமுத்து

*சாவகச்சேரி*

எமது நிலையத்தின் உறுப்பினர் திரு.ஆ.லோகேஸ்வரன் *(பேபி, அதிபர், ரபீனா பூட் பீ.வீ.ரீ லிமிற்.)* அவர்களின் அன்புத் தாயாரின் மறைவையொட்டி எமது இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது. அத்துடன் அவர்களின் துயரிலும் பங்குகொள்கின்றது.

ஓம் சாந்தி!

*இணுவில்* (13317)
இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்.


## பாடசாலையில் அங்குகற்ற மாவீரர் பெயர்ப்பலகை

வடமராட்சி கிழக்கு,ஜன.17

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர்களான 42 மாவீரர்களின் நினைவுப் பெயர்ப் பலகை பாடசாலையில் சமீபத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வே.தி.செல்வரத்தினம் பெயர்ப் பலகையினை திரை நீக்கம் செய்து வைத்தார்.

(ஒ-182)

## நியமனம்

வலி.வடக்கு,ஜன.17

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபராக திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அடுத்த வாரம் முதல் பொறுப்பேற்கவுள்ளார்.

தற்போதைய மேலதிக அரச அதிபரான து.வைத்துலிங்கம் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்தே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

(86)

## பயணிகள் விசனம்

குருநகர்,ஜன.17

யாழ். - கொழும்புத்துறை இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்கள், பயணிகளிடமிருந்து ஒப்பீட்டளவில் அதிக கட்டணத்தை அறவிடுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ். - கொழும்புத்துறைக்கான தனியார் வாகனசேவை குருநகர் கடற்கரை வீதியூடாக நடைபெற்று வருகிறது. இச்சேவையில் போக்குவரத்துச் சபை பஸ்கள் ஈடுபடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-51)

## நிறுத்தல் அளவைக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவைகள் மற்றும் கருவிகளைப் பரிசோதித்து, முத்திரையிடும் பணி எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 5 தினங்கள் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இப்பணி நடைபெறும்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் காவலாளியாகக் கடமையாற்றும்
உத்தியோகத்தர்

### தியாகராசா சண்முகராசா

அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கமநலசேவை நிலையம், கீரிமலை.* (13325)
உதவி ஆணையாளர்
*(கமநலசேவை திணைக்களம்)*
கமநலசேவை குழு
நிலைய உத்தியோகத்தர்கள்.

## நல்லூர் பிரதேச சபை

### கூறுவிலை அறிவித்தல் - 2003

கீழ்க்காட்டப்படும் கற்களை வழங்கக்கூடிய விநியோகஸ்தர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. தங்கள் கூறுவிலைகளை 27.01.2003 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிடப்பட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| | விவரம் | சபை ரக்ரர் மூலம் தங்களின் கிறேசர் வந்து ஏற்றுவதற்கு | நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் தங்கள் வாகனம் மூலம் விநியோகிப்பதற்கு |
|---|---|---|---|
| 01. | கண்டகல்<br>3/4 கியூப்<br>1 " | | |
| 02. | 4" கடைசார்<br>3/4 கியூப்<br>1 " | | |
| 03. | 2" கிறேசர்<br>3/4 கியூப்<br>1 கியூப் | | |
| 04. | 3/4" கிறேசர்<br>3/4 கியூப்<br>1 கியூப் | | |
| 05. | 5/8" கிறேசர்<br>3/4 கியூப்<br>1 கியூப் | | |
| 06. | 1/2" கிறேசர்<br>3/4 லோட்<br>1 கியூப் | | |
| 07. | கிறேசர் டஸ்ற்<br>3/4 லோட்<br>1 கியூப் | | |

க.மணிபல்லவராஜன் *(ஜே.பீ.யு.எம்.)*
*தலைவர்.*
*நல்லூர் பிரதேச சபை.*

(C/26103)

# மனமே, மகிழ்வது சரிதானா?

மனமே நீ இத்தனை மகிழ்ச்சியடைவது சரிதானா? காலையில் கையிலெடுத்த புதினத்தாள்களிலெல்லாம் உன் படங்கள், நீ செய்த தான தருமம் பற்றி பத்திரிகைகளும் வானொலியும் புகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதனாலல்லவா இவ்வளவு மகிழ்ச்சி!

நீ ஏழைகளுக்கு உதவவேண்டுமென்றா தான தருமம் செய்கிறாய்? இல்லையே, இந்தப் புகழ் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தானே தான தருமம் செய்கிறாய்? உன் தந்தை உன்னை நம்பி, தான் நோயுற்ற போது தன் சொத்து முழுவதையும் உன் பெயருக்கு மாற்றிவிட்டார். நீ உன் தம்பியையும் தங்கையையும் ஏமாற்றி அவர்களின் அத்தனை சொத்தையும் அபகரித்துக்கொண்டாய். அவர்கள் கஷ்டப்பட்டு கண்ணீர் விடுகையில், நீ அவர்களது சொத்தில் தான தருமம் செய்து, புகழ் தேடுகின்றாய். நீ செய்வது புகழுக்குரியதா?

நீ புகழக்கூடியதைச் செய்து புகழைப் பெற்றாலும் பரவாயில்லை. எவ்வளவு அநீதியையும் குற்றங்களை

**சி. யோகேஸ்வரி**

யும் செய்துகொண்டு நல்லவனாக நடிக்கிறாய்! ஊருக்கு நீ வேடம் போடலாம். ஆனால், உனக்கே நீ பொய்யனாக, சுய உருவை மறைப்பவனாக இருக்கிறாயே. மற்றவர்களுக்கும் உனக்கும் நீ பொய் வேடம் போடுவதை இன்று முதல் நிறுத்து.

உன்னை நீயே ஆராய்ந்து பார். பெயருக்காக, புகழுக்காக, பட்டத்திற்காக, பதவிக்காக நீ செய்யும் குற்றங்களை மறைப்பதற்காகத்தானே கொடையாளி வேடம் போட்டு ஏமாற்றுகின்றாய்.

'இல்லை'யென்று மற்றவர்களுக்கு நீ கூறலாம். உனக்கே நீ கூறமுடியுமா?

ஆனால், நீ செய்த ஒவ்வொரு குற்றமும் சரியென்று நீ கருதுகின்றாய்.

உன் நண்பனின் மனைவி யாருடனோ உரையாடிக்கொண்டிருந்ததைக் கண்டுவிட்டு, நண்பனிடம் அவளைப் பற்றி தப்பும் தவறுமாகக் கூறினாய். அல்ல, அல்ல கோள்மூட்டினாய்.

இல்லையென்கிறாயா? அப்படியென்றால் நண்பன் மேலுள்ள அக்கறையினால் கூறினேனென்கிறாயா?

அந்தப்பெண் உரையாடுவதை நீ மூன்று தடவைகள் கண்டிருக்கிறாய். ஆனால், அவர்கள் எது பற்றி உரையாடினார்களென்பது உனக்குத் தெரியாது. நீ அதைக் கேட்கவில்லை. ஆனால், அவள்மீது அபாண்டப் பழி சுமத்தி விட்டாய். சிந்தித்துப்பார். உனக்கு அந்த அன்பான தம்பதிகள் மீது உன்னையறியாமலே பொறாமை ஏற்பட்டிருக்கிறது. அல்லது அவர்களை வேதனைப்படுத்தி வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற கொடூர புத்தி ஏற்பட்டிருக்கிறது.

## ஞானக்கதிர்

அதனாலேதான் இப்படி நடந்துகொண்டிருக்கிறாய். ஆனால், உன் நண்பனின் மனைவியின் கெட்ட நடத்தை பற்றி அவனுக்குக் கூற வேண்டிய உன் கடமையைச் செய்ததாக நீ சொல்கிறாய். ஆனால், நீ செய்தது மிகப்பெரிய தவறு.

இப்படி நீ செய்த தவறுகளும், குற்றங்களும் ஆயிரமாயிரம். அவற்றைச் செய்யும் நீ புகழுக்கும் ஆசைப்படுகிறாய். அந்தப்புகழைக் கேட்டு மகிழ உனக்கென்ன தகுதி இருக்கிறது? முதலில் நீ திருந்துவதற்கு ஆரம்பி. படிப்படியாக மனிதனாக வாவது வாழ்வதற்கு முற்படு. செய்வாயா?

*(நன்றி:ஞானச்சுடர்)*

---

## சமய சந்நிதி

இணுவில்,ஜன.17

கோண்டாவில் வடக்கு ஞான வைரவர் ஆலய மணவாளக்கோல நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகும். நண்பகல் 12.00 மணியளவில் அன்னதானம் இடம்பெறும்.

(ஒ-ரி)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2346937 இருந்து
2364242 வரை
சீட்டிழுப்பு இல. 1367
திகதி 15.01.2003

**வெற்றி எண்கள்**
**05 27 35 40 42**

போனஸ் எண்
**18**

**ஜக்பொட் பரிசு**
**ரூபா 2,400,250/-** வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,400,250/- | 2,400,250/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 108 | 10,000/- | 1,080,000/- |
| 3 | 5,388 | 500/- | 2,694,500/- |
| 2 | 90,412 | 20/- | 1,808,240/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 05ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 110,904 | 10/- | 1,109,040/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,192,030/-

**இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா 1,500,000/-**

தொடர் இல. 3345597க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 18ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2362876-5-67
2346952-7-80
2350705-5-14
2350196-7-52
2355290-8-25

PHOENIX O&M





# இன்றைய நாளை சிறப்பாகக் களிக்க!

அனுமதி இலவசம்

சூரிச் சிகரம் நிறுவனத்தின் ஆதரவில்
ரி.ரி.என். நடத்தும்

## மாபெரும் பொங்கல் விழா

**காலம்: இன்று (17-01-2003) வெள்ளிக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 3 மணிக்கு**
**இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்**

நிகழ்ச்சி நிரல்

- மங்கள இசை
- பாரம்பரிய கலை நிகழ்வுகள் (பொய்க்கால் குதிரை, பொம்மலாட்டம், வீர விளையாட்டுகள்)
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்புரைகள்



'உதயன்' பத்திரிகை மற்றும் ரி.ரி.என். இணைந்து நடத்திய மாவீரர் தின கவிதைப் போட்டி மற்றும் 'அறிவுச் செல்வம் - 2002', 'பாடும் சுரங்கள்' ஆகியவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்குதல்.

ttn தமிழ் ஒளி
உதயன்
DMN Digital Media Network
Sikaram

யாழ்.முன்னணி இசைக் கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இன்னிசை விருந்து

# கசிப்பு வழக்கில் அபராதம்

கசிப்பு வைத்திருந்தமை, அதனைத் தயாரிப்பதற்கான 100 லீற்றர் கோடாவை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றத்தினால் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

30, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த பிரான்சிஸ் வின்சன் என்பவருக்கே 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-5)

# கராட்டி சங்க கலந்துரையாடல்

யாழ்மாவட்ட கராட்டிச் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கராட்டிச் சங்கத்தில் பதிவு செய்த அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-5)


## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
கட்டட நிதிக்கான
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
முடிவுகள்

முதலாம் பரிசு இல. –1934
2 ஆம் பரிசு இல. – 1645
3 ஆம் பரிசு இல. – 0604 (C-26105)

## இசை வகுப்புக்கள்

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையினரால் 1965 ஆம் ஆண்டு முதல் இசைவகுப்புக்கள் நடத்தப்பட்டு வந்தன. நாட்டு சூழ்நிலை காரணமாக வகுப்புக்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. தற்பொழுது மீண்டும் **வாய்ப்பாட்டு, பரதம், மிருதங்கம், வயலின், வீணை** முதலிய வகுப்புக்கள் எதிர்வரும் தைப்பூசத்தினமான (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. அனுமதி பெறவிரும்பும் மாணவர்கள் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

காசிவிநாயகர் தேவஸ்தானம், தெல்லிப்பழை. (13328) தலைவர். பாலர் ஞானோதய சபை.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு - 02.12.1936
இறப்பு - 22.01.1997
திதி - 17.01.2003
அமரர்
**செல்லர் ஆறுமுகதாஸ்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
உங்கள் ஆத்மா சாந்தியடைய பரராஜசேகரனை வேண்டுகின்றோம்.

மனைவி, மகன், மகள்மார், மருமகன், பேத்தி

திருக்கேதீஸ்வரி இல்லம், இணுவில் தெற்கு. (13326)

## தவறிவிட்டது

ஒரு தொகைப் பணம், சிறிய றேடியோ, கணக்குப் பதிவேட்டுக் கொப்பி மற்றும் பொருள்கள் அடங்கிய பை (Bag) ஒன்று 14.01.2003 இரவு 8.30 மணிக்கு பருத்தித்துறை பஸ்சில் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிடும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

வெ.ஸ்ரீதர்
முதலாம் கட்டை சந்தி
(வாகன வயரிங் வேக்ஸ்)
பருத்தித்துறை. (13333)

## விரிவுரையாளர் தேவை

யாழ்நகரில் Telecommunication & Electronics வகுப்புகள் நடத்துவதற்கு விரிவுரையாளர்கள் தேவை. நேர்முகப்பரீட்சை 21.01.2003 அன்று நடைபெறும்.
விவரங்களுக்கு: 506803.

## தையற்காரர் தேவை

ஆண்களுடைய ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும். பெண்களுடைய ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும், தையல் பயிலவிரும்புபவர்களும் தேவை.

நேரில் வரவும்.
No.89, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (13319)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை
(பாதுகாப்பு அமைச்சில் அங்கீகாரம் பெற்றது)
**வெற்றிடங்கள் - கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்**

1. கல்வித் தராதரம்:- க.பொ.த.(சா.த.) சித்தி.
(இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
2. உயரம்:- 5'4"
மார்பு:- 32"
வயது:- 22 வயதுக்கு மேல்.
3. நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
4. நேர்முகப் பரீட்சை:- நாளை (18.01.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பிரசன்னமாயிருக்கவும்.
I. கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்கு உட்பட்டது)
II. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
III. கல்வித் தராதரம்.
IV. தே.அ.அ., வி.அ.அ. (போட்டோ பிரதி)
5. கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள்:-
(E.P.F - E.T.F, Attendance Bonus + Allowance etc.)

இல.43, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (C-26106) - பணிப்பாளர்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 06 - 1925



மறைவு 05 - 02 - 1993

**அமரர் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்**
(மாயவர்)

ஐயா!
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற
முதுமொழியின் வழிவாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
நீர் எமைப் பிரிந்து ஆண்டுகள் பத்தாகி விட்டனவே
ஆயினும் எம்மனதில் ஆறவில்லை இத்துயரம்
என்றென்றும் உம்நினைவோடு வாழ்கின்றோம் இப்புவியில்.

காளிகோவிலடி, மல்லாகம். (C-26108)
உங்கள் நினைவோடு வாழும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கனடா, ஐக்கிய ராட்சியம், அவுஸ்திரேலியா, அமரிக்கா போன்ற நாடுகளுக்கு ....

துடிபெயர, கல்வி கற்க, சுற்றுப்பயணம் மேற்கொள்ள விரும்புகின்றீர்களா?

**இது தொடர்பான இலவசக்கருத்தரங்கு எதிர்வரும் 18/01/2003, சனி, பி.ப. 3.00 மணிக்கு M.P.C.S Auditorium K.K.S வீதி யாழ்ப்பாணம், என்ற இடத்தில் நடைபெறும்.**

கனடா செல்லுங்கள்

### உயர்தரக் கல்லூரிகளில் பின்வரும் கற்கை நெறிகள்

சான்றிதழ், டிப்ளோமா, பட்டப்படிப்பு

கணக்கியல், தொழில் நுட்பவியலாளன்,
ஹோட்டல் முகாமைத்துவமும் சுற்றுப்பயணவியலும்,
கணனி, புரோக்ராமர், எனலைஸர்,
மின் பொறியியல்,
பி.ஏ. தகவல்கள்,
ஆசிரியர் கற்கை நெறி.

### E-Commerce Program

* தொழில் நுட்ப வியல் முகாமைத்துவம்
* நுண்ணியல் கணனி வியாபார வலைப்பின்னல்
* தகவல் மிகைத் தொழில்நுட்பம்
* இன்ற்றரெக்டிங் கேம்ஸ் டிசைன்
* கணனி எனலைஸ்.
* கணனி அனிமேஷன் ஸ்பெஷலைஸ்
* வாடிக்கையாளர் கோவையாளர் புரோக்ராம்.
* வெப் வெளியீடும் கற்கைப் படுத்தலும்

### ஆகக் குறைந்த கல்வித் தகைமை க.பொ.த சா/த மட்டுமே

இது ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அல்ல

கடந்த 7 வருடமாக வாழ்க்கைத்தரத்தில் 1ம் நிலையில் கனடா இருந்து வருகிறது

கனடா நியூசிலாந்தில் தொழில் தன்மை:-

முழுநேரக்கல்வியை பின்னற்றும் வெளிநாட்டு மாணவர்கள் கற்கும்போதே தொழில் புரிவதற்கான அனுமதியைப் பெறுவர். குறிப்பிட்ட சில தகைமைகள் குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்குத் தேவைப்படுவதால் வெளிநாட்டு மாணவர்கள் அந்தந்தப் பிரதேசங்களின் சட்ட விதிகளுக்கேற்ப நிரந்தர வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

தற்போது சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன
புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன
வருடந் தோறும் நியூசிலாந்திற்கு 50,000 விசாக்கள்
வருடந் தோறும் அவுஸ்திரேலியாவுக்கு 85,000 விசாக்கள்
வருடந் தோறும் கனடாவுக்கு 285,000 விசாக்கள்

**IEMC Global Group (PVT) LTD**
No.7, Eashwary Road, Colombo 6.
Tel No. 366780, 559767, 559766
0777 743370 0777 711444,
Fax. 074 513161
E.mail: iemcsp@sltnet.lk

Bata Bata Bata Bata



# இலவசம்!

ஒவ்வொரு பாடசாலைப் பாதணிச்சோடிகளுடன் 6 கலர் பேனாக்கள் முற்றிலும் இலவசமாக

வியாபாரிகளே அதிகூடிய விற்பனை விலைக்கழிவுடன் மொத்தமாக பாதணிகளைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்



அனைத்து விதமான பாடசாலை பாதணிகளையும் மொத்தமாக பெற்றுக்கொள்ள

யாழ்நகரில் பாட்டா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மொத்த விற்பனையகம்

**லக்ஷ்மி கூட்டு நிறுவனம்**

இல.253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)


## இளங்கலைஞர் மன்றம்

**இசைவிழா** *பெப்ரவரி 14 - 23* **(10 தினங்கள்)**

மேற்படி இசைவிழாவில் பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் தாம் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் அணிசெய் கலைஞர்கள் பற்றிய விவரங்களுடன் 25.01.2003இற்கு முன்பாக செயலாளர், இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(13336) - செயலாளர்.


**City & Guilds**

London. U.K. May/June 2003

**Diploma In Telecommunications & Electronics Engineering**

யாழ்.மாணவர்களுக்கான வகுப்புக்கள்

20.01.2003 மாலை 4 மணிக்கு ஆரம்பம்.

பதிவு செய்தோர் தவறாது சமுகமளிக்கவும்.

VICKNAA Tution Centre
52,Stanley Road
Jaffna.
T.P. : 0777-662033

APSS International
57, E.S.Fernando Mw,
Colombo - 06.
T.P. : 362547

APSS INTERNATIONAL நிறுவனம்

(C/26100) C&G இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் திருமதி கண்மணி அப்புக்குட்டி

வீட்டுக்கிருத்தியம்: 17-01-2003

எங்கள் அருமைத்தாயாரின் (கண்ணம்மா) இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்தோடு இன்று 17-01-2003 வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

*43/7, இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(13338)

## சேலைத்தலைப்பு சக்கரத்தில் சிக்கி பெண் படுகாயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த பெண் விழுந்ததில் தலையில் படுகாயமடைந்தார்.

மட்டுவிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சிவானந்தன தங்கராணி (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளின் பின் சக்கரத்தில் சேலைத்தலைப்பு சிக்கியதாலேயே விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு கருத்து வெளியிட்ட சமயமே அவர் இவ்வாறு கூறினார்.

'புலிகளின் குரல்'வானொலி ஒலிபரப்பு நேற்று விஸ்தரிக்கப்பட்டது. அதன் ஒலிபரப்புப் பிரதேசங்கள், நிகழ்ச்சிகளின் தன்மை, அவைபற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பன குறித்து பத்திரிகையாளர்கள் பேராசிரியர் பீரிஸிடம் கேள்வியெழுப்பினர். அப்போது அவர் கூறியதாவது:-

'புலிகளின் குரல்' வானொலி தொடர்பாக பலதரப்புகளில் இருந்தும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

அந்த ஒலிபரப்புச் சேவை தொடர்பாக அரசுடன் உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்கவே அதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

'புலிகளின் குரல்' வானொலி மூலம் சமாதான முயற்சிகளுக்கு நன்மை ஏற்படும் என்பதே எமது அபிப்பிராயம். சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான புலிகளின் அபிப்பிராயத்தை மக்கள் அறிந்துகொள்ள இது வாய்ப்பாக அமையும். இது மிகமுக்கியமான ஒரு விடயம்.

சமாதான முயற்சிகளில் எட்டப்படும் இறுதித்தீர்வு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு எம்பிக்களால அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக மக்கள் கருத்தை அறிவதற்காக அது சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றிற்கு விடப்படும். அப்போது மக்களே தீர்மானம் எடுக்கப்போகிறார்கள்.

அதற்கு முன்னர் அவர்கள் இருதரப்புக் கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களை தெரிவித்திருக்கவேண்டும்.

'புலிகளின் குரல்' வானொலி புலிகளின் பக்கக் கருத்தை மக்கள் அறிவதற்கு உதவும்.

'புலிகளின் குரல்' வானொலியின் ஒலிபரப்பு வீச்சு மற்றும் நிகழ்ச்சிகளின் தன்மை என்பன தொடர்பாக சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளை வைத்து நாம் தீர்மானம் எடுத்துவிட முடியாது. ஏனெனில் அது பற்றிப் புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக எதையும் இன்னும் அறிவிக்கவில்லை - என்றார் அமைச்சர் பீரிஸ். (ஐ-10)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

தூள்

பிரதிகள் உடன் விற்பனை.

ITN

பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

(C/26110)



### தேவை

விற்பனையாளர், கணக்காளர், சிட்டை எழுதுநர், பைபின்டிங் தெரிந்தவர்கள் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும்.

மேப்பர் ஹவுஸ்
இல,300 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (13339)



BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

புதிய பிரிவு

A/L 2004

இரசாயனவியல்

அசேதன இரசாயனம்

BY:- A.சிவகுமார் (B.Chem.e)

ஆரம்பம்:- 18.01.2003

SAT - 6.30 a.m. (13291)


# யாழ்.கல்வியியல் கல்லூரி ஞாயிறுமுதல் புதிய இடத்தில்!

வலி.கிழக்கு,ஜன.17

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் கோப்பாய் இராசவீதியில் நிறுவப்பட்டுள்ள பு[illegible]ல் இயங்கும் என்று பீ[illegible]லநாதன் தெரிவித்தார்.

சகல மாணவர்களும் அன்று முதல் புதிய இடத்தில் வகுப்புக்களுக்கு சமுகமளிக்கவேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

புதிய கட்டடத்தில் வகுப்பறை மண்டபங்களுக்கு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

தர்மலிங்கம் மண்டபம், குமரன் கோட்டம், குமரி கோட்டம், ஆகிய பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதி கட்டட வேலைகளை விரைவில் ஆரம்பிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதேவேளை -

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதல[illegible]ம் வருட மாணவ[illegible] விரிவுரைகள் நாளை [illegible]கிழமை ஆரம்பமாக இருப்பதால் காலை 8 மணிக்கு கோப்பாய் [illegible]ரியகலாசாலை[illegible], மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் சமுகமளிக்குமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஐ-180)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னையா கனகம்மா

சங்குவேலி, கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வரியப்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி [illegible]யா கனகம்மா நேற்று (16.01.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை சின்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மலிங்கம், சுந்தரலிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தனலட்சுமி (பிரான்ஸ்), யோகலிங்கம் (கொழும்பு), விசுவலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகேஸ்வரி, வில்வராணி, காலஞ்சென்ற இராசதுரை தவயேதி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியதர்சினி, சசிக்குமார், சஞ்சீவகுமார், சிவரஞ்சன் (ஜேர்மனி), நிரஞ்சகுமார் (லண்டன்), நிரஞ்சனா (கனடா), சுபேன் (லண்டன்), சஞ்சேன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.01.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு (புதிய நேரம்) இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.*

(C/26112)

தகவல்:
சி.சுந்தரலிங்கம் (மகன்)

## திருமதி ஞானமணி துரைசிங்கம்

*(ரஞ்சி ரீச்சர்)*

கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானமணி துரைசிங்கம் நேற்று (16.01.2003) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற J.D.குணரட்ணம் தம்பதியினரின் புதல்வியும் அப்பாத்துரை சிறில்துரைசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் றோய் தயாளராஜன் **(Colombo)**, சிறில்தனராஜன் (கச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் பூமணி, நேசமணி, குணசீலன், ஜெயசீலன், தவசீலன், அதிசயமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நேசதுரை மற்றும் ரதி, தேவா, பாலசிங்கம் (மணி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.01.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஞானபதி',*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(13341)

தகவல்:
துரைசிங்கம். (கணவர்)

## பொன்னு பூபதி

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த பொன்னு பூபதி அவர்கள் நேற்று (16.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லார் பொன்னு (ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி) அவர்களின் அன்பு மனைவியும் குகேந்திரன் (இலங்கை போக்குவரத்துச் சபை பொறியியல் பகுதி), ஜெயந்தி, கஜேந்திரன் (யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை, 3ஆம் அணி மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியசீலன் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமியாரும் மதுஷா, ஜீவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.01.2003) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(13340)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கந்தையா நாகரத்தினம்

*(அன்னம்)*

ஈச்சமோட்டையைச் சேர்ந்த திருமதி கந்தையா நாகரத்தினம் நேற்று (16.01.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு கந்தையாவின் அன்பு மனைவியும் ஜோதீஸ்வரி (பிரான்ஸ்), குலேந்திரன் (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), யோகேந்திரன் (பிரான்ஸ்), சுகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகலிங்கம், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலேந்திரா லோகினி (ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி) மற்றும் கமலாசினி (பிரான்ஸ்), நிரோஜந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவமணி (பட்டு), பேரின்பராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நல்லையா ராஜீவி ஆகியோரின் மைத்துனியும் குருபரமூர்த்தி, வத்சலா (சுவிஸ்), அங்கதன் (பிரான்ஸ்), வசீகரன் (பிரான்ஸ்), வனிதா (பிரான்ஸ்), கஜேஷாளந (மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி), கௌசிகா (பிரான்ஸ்), ஜாவின் (பிரான்ஸ்), நிந்துஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியாரும் மகேந்திரராஜா, சுபாஜினி (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும் பிரணவாமினி, பிரணவன், பிருந்தாபன் ஆகியோரின் மாமியாரும் வித்தியா (சுவிஸ்), விநோதன் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (19.01.2003) மாலை 3.00 மணியளவில் மானிப்பாய், சோதிவேம்படி ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிட்டிபிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோதிவேம்படி ஒழுங்கை,*
*மானிப்பாய்.*

(13335)

தகவல்:
க.குலேந்திரன் (இந்திரன்)
(மகன்)

# மனித உரிமை தொடர்பான விடயங்களுக்கு அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் முன்னுரிமை

## அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,ஜன.17

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் ஏழாம் திகதி முதல் பத்தாம் திகதிவரை இடம்பெறவுள்ள ஐந்தாம் சுற்றுப் பேச்சுக்களில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார். பேராசிரியர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களில் அனைத்து விடயங்களும் ஆராயப்பட வேண்டும். எனவே, அரசியல், பொருளாதாரம், மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றல் ஆகிய அனைத்து விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும். ஆனால் ஒவ்வொரு கட்டப் பேச்சுக்களிலும் திடீர் மாற்றங்கள் ஏற்படும் என்றோ, குறித்த ஒரு தினத்தில் பேச்சுக்கள் முடிக்கப்படும் என்றோ நினைப்பது தவறு.

நான்காம் சுற்றுப் பேச்சுக்களின் போதே சமாதான முயற்சிகள் முறிந்து விடும் எனப் பலர் நினைத்தார்கள். சமாதானம் மீது அரசு கொண்டுள்ள அர்ப்பணிப்பே அந்த எண்ணத்தை முறியடித்தது. உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினையில் புலிகள் இயக்கம் முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருந்தது. அதேவேளை அரசும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது. ஆனால் இருதரப்பினரும் நெகிழ்வாகப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நிலைப்பாட்டிற்கு வரமுடிந்தது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் முதலில் மீள்குடியமர்த்தவும், ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை கிடைத்த பின்பு அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றி முடிவெடுக்கவும் தீர்மானித்தோம்.

அதற்கமைய மீள்குடியேற்றத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பாக இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பும், மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான வீடுகள் பற்றி 31 ஆம் திகதியும், அதற்கு என்ன தேவை என்பது குறித்து பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதியும், அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாணம் பற்றிய தீர்வுகள் 14 ஆம் திகதிக்கு முன்னரும் மேற்கொள்ளப்படும் என்றார்.

# அதாவுல்லா அணிக்கு எதிரான இடைக்காலத் தடை நீடிப்பு!

## ஹக்கீமின் மனுமீதான விசாரணை 24இல்!

கொழும்பு,ஜன.17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் எஸ்.சுபைர்தீன், ஏ.எம்.அதாவுல்லா, டாக்டர் ஏ.எல்.எம்.ஹப்ரத், ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகவும், தவிசாளராகவும், செயலாளர் நாயகம் ஆகவும், தேசிய அமைப்பாளராகவும் தம்மை அழைத்துக்கொள்வதற்கும் செயலாற்றுவதற்கும் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை கொழும்பு பதில் மாவட்ட நீதிபதி திலக்தாப்ரு இம்மாதம் 24ஆம் திகதி வரை மேலும் நீடித்துள்ளார்.

இவ்வழக்கில் 1 முதல் 19 வரையிலான எல்லாப் பிரதிவாதிகளும் கட்சியின் அதியுயர்பீட உறுப்பினர்களாகச் செயல்படுவதற்கு எதிரான இடைக்காலத் தடையுத்தரவும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆட்சேபனை தெரிவிப்பதற்கும் பதில் தாக்கல் செய்வதற்கும் பிரதிவாதிகள் தரப்பில் மேலும் காலஅவகாசம் கோரப்பட்டதால் இம்மாதம் 24 ஆம் திகதி வரை அதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சார்பில் சட்டத்தரணி எம்.சி.எம். முனீரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் முஹம்மத் மற்றும் சட்டத்தரணிகளான ஏ.ஏ.எம். இல்யாஸ், நிசாம் காரியப்பர், எம்.எஸ்.ஏ.வதூத் ஆகியோர் ஆஜராகினர்.

பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ, சட்டத்தரணி கபிலலியனகமகே ஆகியோர் ஆஜரானதோடு பதில் தாக்கல் செய்வதற்கும் ஆட்சேபனை தெரிவிப்பதற்கும் மேலும் கால அவகாசம் கேட்டு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.17

சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாதகல் சென்ஜோசப் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை - எல்லே மற்றும் வலைப்பந்தாட்டம் ஆகிய சுற்றுப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் எனவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## நாவாந்துறையில் சமாதானக் குழு தெரிவு

குருநகர்,ஜன.17

நாவாந்துறையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக நேற்று வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்கங்களின் சமாசப் பணிமனையில நடைபெற்ற கலந்துரையாடலில் சமாதானக் குழு ஒன்று தெரிவுசெய்யப் பட்டது. அக்குழுவில் இடம்பெறும் 16 பிரதிநிதிகளின் விவரம் வருமாறு:-

* நாவாந்துறை பங்குத் தந்தை வண.பிதா பீற்றர் துரைரட்ணம் (தலைவர்).
* சீ.வி.க.சிவஞானம்.
* சி.தவரட்ணம்.

நாவாந்துறை கிராம உத்தியோகத்தர்கள்:

- க.விஜயரட்ணம்.
- எம்.சுந்தரராஜன்.

* நா.பொன்னம்பலம்.
* ஐ.குலம்.
* நா.மரியதாஸ்.
* தா.தம்பையா.
* க.கரீந்திரன்.
* எ.அல்பேட் சந்தியா.
* எஸ்.மரியதாஸ்.
* யோ.பிரான்சிஸ்.
* ம.சின்னராசா.
* அ.பிரபு.
* எம்.யேசுதாசன். (ஐ-51)

## நோயினால் போராளி மரணம்!

கிளிநொச்சி,ஜன.17

சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாம் லெப்ரினன்ட் துர்கரன என்று அழைக்கப்படும் கிருஸ்ண பிள்ளை எழில்ராஜ் (துறைநீலாவணை) என்ற போராளியே உயிரிழந்தவராவர். (ஐ-10)

## மீள்குடியமர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது உறுப்பினர் விவரங்களை நேற்று சமர்ப்பிக்கவில்லை.

புலிகள் தமது உறுப்பினர் பட்டியலை சமர்ப்பித்தனர். அந்தப் பட்டியல் ஏற்கப்பட்டது.

புலிகளின் சார்பிலான உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

சி.ரவீந்திரசர்மா (நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர்), ஆர்.இரத்தினம் (வேலணை உதவி அரச அதிபர்), என்.வேதநாயகன் (கிளிநொச்சி மேலதிக அரச அதிபர்), எஸ்.நீலகண்டன், எஸ்.பொன்னம்பலம், எஸ்.சிவநாதன், கலாநிதி (சூசை ஆனந்தன். (ஐ-3-8)

# 'புலிகளின் குரல்' வானொலியின் சேவை நேற்றுமுதல் விஸ்தரிப்பு!

வவுனியா,ஜன.17

வடக்கு - கிழக்குப் பகுதியில் மிகத் தெளிவாகக் கேட்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 'புலிகளின் குரல்' வானொலி நேற்று முதல் தனது சேவையை விஸ்தரித்திருக்கின்றது.

நோர்வே அரசின் உதவியினால் பெறப்பட்ட அதிசக்திவாய்ந்த வானொலிக்கருவி மூலம் இந்த சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு புலிகளின் வானொலி சேவையை உருவாக்குவதில் பெரும் பங்காற்றினார். எனவே அவரின் 10 ஆவது நினைவு தினமான நேற்றே 'புலிகளின் குரல்' வானொலி சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 'புலிகளின் குரல்' நிலையத்தில் கிட்டுவின் நினைவுதின நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெற்றன.

எப்.எம். 98 அலைவரிசையில் சேவையின் தூரம், நேரம் என்பன விஸ்தரிக்கப்பட்டுள்ளன. சிங்களச் சேவையின் நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## படையினர் மூடிவைத்துள்ள

# குருநகர்பகுதி வடிகால்களை திறக்கக் கோரித் தீர்மானம்

குருநகரை அண்டிய கரையோரப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினால் மூடி அடைக்கப்பட்டுள்ள கழிவுநீர் வடிகால்களை உடனடியாக திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ். மாநகர சபை பொதுச் சுகாதார அதிகாரி பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலிலே தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.யாழ் மாநகர சபையின் சுகாதாரக்குழுவின் தலைவர் மனுவல் மங்களநேசன் ஏற்பாட்டில் இந்தக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

குருநகரை அண்டிய கரையோரப பகுதிகளில் உள்ள கால்வாய்கள் பல இராணுவத்தினரால் அடைக்கப் பட்டுள்ளதால் கழிவுநீர் கடலில் சென்று சேரமுடியாது தடைப்படுகின்றது. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. ஆகவே இந்த வடிகால்களை திறந்து விடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இக்கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:

☆ குருநகர் பகுதியில் சிதைவடைந்துள்ள வடிகால்வாய்களை சிரமதானத்தின் மூலம் புனரமைப்புச் செய்யவேண்டும்.

☆ யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களில் சுகாதாரக்குழுக்களை அமைத்து அந்தப்பகுதிகளில் சுகாதார நிலைமையை மேம்படுத்தல் வேண்டும்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன், மாநகரசபை ஆணையாளர் ஆர்.இராமலிங்கம்,யாழ்.பொதுச்சுகாதார அதிகாரி ஆ.ஜீவநாதன், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த தாய்சேய் குடும்பநல வைத்திய அதிகாரி திருமதி ராதா கந்தசாமி, மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் குருநகர் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மூத்த தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் கொடி வணக்கம் செய்தார். அதனைத் தொடர்ந்து போராளிகளும், பொதுமக்களும் கொடி வணக்கம் செய்தனர்.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்ட கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் உருவப்படங்களுக்கு ஈகச் சுடரேற்றப்பட்டது. மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன. போராளிகளும், பொதுமக்களும் இந்நிகழ்வுகளில் பங்குபற்றினார்கள். தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

பின்னர் கிராம சேவையாளர் எஸ்.சிவபாலசிங்கம தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை -

நல்லூரிலுள்ள கேணல் கிட்டு சிறுவர் பூங்காவில் நேற்றுக்காலை 10 மணிமுதல் விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தளபதி கேணல் கிட்டுவின் மைத்துனி திருமதி இராஜசிங்கம் பொது ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார். விடுதலைப் புலிகளின் தாக்குதல் பிரிவு தளபதிகளில் ஒருவரான வீரமணி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம், கொடிவணக்கம் என்பன இடம்பெற்றன.

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வீரமறவர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களின் உறவினர்களால் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸெல்வராசா ஆகியோர் நினைவுரையாற்றினர்.

இதேவேளை கேணல் கிட்டுவின் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியும் நல்லூர் கிட்டு பூங்காவில் இடம்பெற்றது. இக் கண்காட்சியைத் தென்பகுதியைச் சேர்ந்த மக்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டனர்.

மாலை நிகழ்வுகள் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இடம்பெற்றன.

(ஐ-10-8-51-17-173-180-11-70)

## உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரோல்ட் கலாநிதி நரேஷ் துரைசுவாமி, செல்வி டேல் ஆகியோர் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஒரு மணிநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

'சிரான்' உபகுழுவின் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியின் காப்பாளராக உலகவங்கி பொறுப் பேற்றுக் கொண்டமை மகிழ்ச்சிக்குரியது. அதற்காக நாம் உலக வங்கிக்கு எமது தேசியத் தலைவரின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்று சு.ப.தமிழ்ச்செல்வன் அங்கு தெரிவித்தார். (ஐ-10)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
திரீ
வீடியோ விமல்
(13337) யாழ்ப்பாணம்.

எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
சத்தியராஜ் நடித்த (இருவேடம்)
★ ராமச்சந்திரா
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்
82/2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-222-3546
★ பிரதிகள் மதியத்துக்கு பின் பெற்றுக்கொள்ளலாம்.

A/L வர்த்தகப் பிரிவு
2005
Sat/Sun
Acc. திரு.பாலவாசன் 12-01
Eco. திரு.மோகன் 11-12
B.St. திரு.யசோ 01-02
BEACON யாழ். வெலிங்டன் சந்தியருகில் (13301)

தவறிவிட்டது
சுன்னாகத்தை சேர்ந்த திருமதி தர்மலிங்கம் - ஆசிரியையின் தாலி சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலிற்கும் (புகையிரத நிலைய வீதி) சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13343)

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. [F.M.Spl.]
A/L 2003
கம்பனி
Sat., Sun. 1-2 p.m.
A/L 2004
கட்டுப்பாட்டுக்கணக்கு
Sat., Sun. 7-8 a.m.
ஆரம்பம் 18.01.2003 Sat.
விக்னா கல்வி நிறுவனம்

NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம் - A/L 2004
ஒரு தள விசைகள்
Sat, Sun (4.30 - 6.00)
ஆரம்பம்: 18.01.2003
ஆசிரியர் : செந்தில்நாதன் B.Sc.


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை

அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை நேற்று (16.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் திருமதி இராஜேஸ்வரி (நூலகர் - மாநகரசபை, யாழ்ப்பாணம்), திருமதி இராசலட்சுமி, திருமதி புனிதவதி (டென்மார்க்), திருமதி புவனேஸ்வரி, பொன்ராசா (ஜேர்மனி), ஆனந்தராசா (சுவிஸ்), உதயன் (ஹோலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராசநாயகம், தேவராசா, செல்வச்சந்திரன், ஜெயக்குமார், திருமதி தாரணி, திருமதி சிவரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அல்வாய் வடமேற்கு,
திக்கம். (13342)

தகவல்:
தேவராசா (மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.